Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 3?9

தபாற் பெட்டி எண: 49

மலர் 3 | யாழ்ப்பாணம் பிலவ ஆடி 26 ஆம் நாள் ஸபர் 27 (10-8-61) | வியாழக்கிழமை | இதழ் 152

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2. மதுரை

# மிளகாய், வெங்காயம் பயறு இறக்குமதி உரிமை

## இனி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கே

### தனிப்பட்ட வியாபாரிகள் மீது வர்த்தக மந்திரி 'பாணம்'

கொழும்பு, புதன்

**"மாவு, சீனி ஆகியவற்றின் விலையில் 5 சதம் அதிகரிக்கப்பட்டது உண்மையே. ஆனால் இவைகள் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அல்ல. அரிசியை விடக் குறைந்த அத்தியாவசிய உணவுப்பொருட்களே இவை" என வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன இன்றைய பார்லிமெண்ட் பட்ஜட் விவாதத்தின் போது கூறினர்.**

"மாவுக்குப் பதில் குரக்கன், மரவள்ளி ஆகிய பொருட்களை சுலபமாக வாங்கலாம். சீனிக்குப் பதில் பாகுவெல்லம், கருப்பட்டி ஆகியவற்றை கிராமவாசிகள் உபயோகிப்பதால் அவர்கள் இதனல் கடுமையாகப்பாதிக்கப்படவில்லை" என்றும் மந்திரி கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "ஏழை மனிதனை பணக்காரனின் அந்தஸ்துக்கு உயர்த்துவதும், முதலாளிகளிடமிருந்து செல்வத்தை எடுப்பதுமே அரசாங்கத்தின் கொள்கை.

ஏற்றத் தாழ்வை ஒழிக்குமுகமாக வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தையும், இதரநடவடிக்கைகளையும் அரசாங்கம்கொண்டுவந்தது. ஐக்கியதேசியக் கட்சியினரை விட அரசாங்கத்தின் நிதிக்கொள்கை நடைமுறை சாத்தியமானது. 1953ம் ஆண்டைவிட இன்றைய நாட்டின் நிதிநிலைமை மோசமாய் இருந்த போதிலும் அரசாங்கம் அரிசியின் விலையை உயர்த்தவில்லை. ஆனல் நாட்டின் நிதிநிலைமை நன்ருய் இருந்த போதே ஐக்கிய தேசியக் கட்சி அரிசியின் விலையை உயர்த்தியது. மோதரையில் ஒரு ஆலையை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். கோதுமையை இறக்குமதி செய்து இங்கே மாவாக்கி குறைந்த விலையில் மக்களுக்கு மாவு விநியோகிக்கப்படும்.

சீன இலங்கையிலிருந்து ரப்பர் வாங்குவதை நிறுத்தினல் உள்நாட்டு கைத்தொழில் ஸ்தம்பிதமாகிவிடும். ஐ. தே. கட்சி சோஷலிஸ நாடுகளுடன் வர்த்தகம் செய்ய ஊக்கமளிக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அவ்வாறு செய்ததினல் அந்நாடுகளிலிருந்து உதவி பெற முடிகிறது.

இந்நாட்டில் கருவாட்டு வர்த்தகம் மிகவும் ஊழல் நிறைந்திருக்கிறது. கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கருவாட்டு வர்த்தகத்தில் பிரவேசிப்பதை சில அரசியல் குழுக்களும், தனிப்பட்ட வர்த்தகர்களும் நாசமாக்க முயல்கின்றனர்.

ஆனல் இதில் அவர்கள் தோல்வியடைந்துவிட்டார்கள். உருளைக் கிழங்கு, பம்பாய் வெங்காயம், மிளகாய், பயறு ஆகியவற்றை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதி செய்யப் போகிறது. அவற்றின் விநியோகம் தனிப்பட்டவர் கையிலிருந்து அகற்றப்படுவதின் மூலம், இச்சாமான்களின் விலை குறையவும், வாழ்க்கைச் செலவு குறையவும் வழிபிறக்கும்.

## மும்முறை முத்தமிட்டு வரவேற்ருர் குருஷ்சேவ்

### மாஸ்கோவில் ரஷ்ய வானவெளிப் பிரயாணி

மாஸ்கோ, ஆக. 9

ரஷ்ய வானவெளி வீரர் மேஜர் டிட்டாவ் இன்று மாஸ்கோ விமான நிலையத்தில் வந்திறங்கியபோது, அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமர் திரு. குருஷ்சேவும், டிட்டாவின் தாயார், தந்தை ஆகியோரும், முதல் வானவெளிப் பிரயாணி ககாரினும் அவரை வரவேற்றனர்.

முதலில் வரவேற்ற திரு. குருஷ்சேவ் அவரைக் கட்டித் தழுவி, மூன்றுமுறை முத்தமிட்டார். விமானநிலையத்திலிருந்து 12 மைல் நீளப்பாதை நெடுகிலும் அவர் திரு. குருஷ்சேவுடன் காரில் செல்லும்போது லக்ஷக்கணக்கான மக்கள் ஆரவாரித்து வரவேற்றனர்.

லெனின், ஸ்டாலின் சமாதியிருக்கும் செஞ்சதுக்க உச்சியிலிருந்து மேஜர் டிட்டாவ் மக்களுக்கு உரை நிகழ்த்தினர். இன்று கிரம்ளின் மாளிகையில் அவருக்கு ஒரு வரவேற்பு நடத்தப்படும். அப்போது ரஷ்ய ஜனதிபதி திரு. பிரஸினேவ் மேஜர் டிட்டாவுக்கு கௌரவப்பதக்கம் ஒன்றை வழங்குவார்.

மேஜர் டிட்டாவ், சர்வதேச பத்திரிகை நிருபர்களுக்கும் பேட்டியளிப்பார்.

மேஜர் டிட்டாவுக்கு "ஆர்டர் ஆப் லெனின்" சோவியத் யூனியன் வீரர், வானவெளி விமானி என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. தங்க நட்சத்திரப் பதக்கம் ஒன்றும் வழங்கப்பட்டது.

"டிட்டாவின் வானவெளி யாத்திரையினல் கிடைத்த விபரங்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படும்" என திரு. குருஷ்சேவ் கூறினர். "இந்த வானவெளிச் சாதனைக்குச் சமம் என்று சொல்லக்கூடியசாதனை உலகத்தில் எதுவுமே இல்லை. ஆயினும் சமாதானத்துக்கே வானவெளி சோதனை உபயோகிக்கப்படும்" என்றும் குருஷ்சேவ் தெரிவித்தார்.

## மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்க் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் பொது மக்களுக்கு ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளார். திருவிழா நாட்களில் மாநகரசபைச் சுகாதார பகுதியினர் கோயில் வீதிகளையும், சுற்றுப்புறங்களையும் மற்றைய ஏனைய வீதிகளையும் மிகவும் துப்புரவாக வைத்திருப்பதற்குப் பெரிதும் கவனம் செலுத்துகிருர்களென்றும் இம்முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படியும் அவ் வேண்டுகோளில் கேட்கப்பட்டுள்ளது.

பக்திக்கு அடுத்தது சுத்தியாகையால் பொதுமக்கள் சுகாதாரமாக நடந்து கொள்வதோடு கடைகளில் ஈக்கள் மொய்க்கும், தூசி படியும் தீன் பண்டங்களை வாங்கிச் சாப்பிட வேண்டாமென்றும் சுகாதாரப் பகுதியினரும் பொலிசாரும் சொல்வதைக் கவனித்து நடக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இத்திருவிழாவை முன்னிட்டு இம்மாதம் 14-ம், 15-ம் திகதிகள் எல்லா இடங்களையும் சுத்தம் செய்யும் தினங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

---

## ஷெல் கம்பெனி காணி பற்றி இடைக்கால உடன்பாடு

### பெட்ரோலியம் கார்ப்பரேஷன் செய்து முடித்தது

கொழும்பு, புதன்

கொலன்னவையில் ஷெல்கம்பெனிக்குச் சொந்தமான காணி பற்றி, இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கும், ஷெல்கம்பெனிக்குமிடையே இன்று இடைக்கால உடன்பாடு ஒன்று செய்துகொள்ளப்பட்டது. சென்ற ஜூலைமாதம் 20-ம் தேதி வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன விடுத்த உத்தரவின்படி இந்த இடைக்கால உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையில் திரு. என். ஈ. வீரசூரியா கியூ. ஸி., திரு. ஸாம் எச். சில்வா ஆகியோரும், ஷெல்கம்பெனி சார்பாக திரு. எம். கோரியும் கைச்சாத்திட்டனர்.

## ரயிலில் இருந்துகுதித்து தப்பிய கைதி

கொழும்பு, புதன்

ஒரு வழக்கு சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலிருந்து மன்னருக்கு ரயிலில் அழைத்துச்செல்லப்பட்ட, விளக்கமறியலில் இருந்த உக்குபண்டா என்ற கைதி கிளிநொச்சியில் ரயிலில் இருந்து இன்று காலை குதித்தோடித் தப்பிவிட்டார் என்று தெரிகிறது.

## தபால் யூனியன்கள் ஆட்சேபம்

கொழும்பு, புதன்

அரசாங்கத்தின் மேலதிக வரி விதிப்பையும், சீனி, மாவு, தீப்பெட்டி ஆகியவற்றின் விலை உயர்த்தப்பட்டதையும் தபால் யூனியன்கள் ஆட்சேபிக்கும். இதுசம்பந்தமாக தபால் தந்தி ஐக்கிய முன்னணி தொழிற்சங்கங்கள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளன.

## 2500 ஆசிரியர்கள் இடமாற்றம் கோரியுள்ளனர்

### அக்டோபரில் 1000 பேருக்கு இடமாற்ற உத்தரவு கிடைக்கும்

கொழும்பு, புதன்

ஆசிரியர்களின் புதிய இடமாற்றத் திட்டப்படி 2500 ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாய் கல்வி இலாகா தெரிவித்துள்ளது. இவர்களில் கணவனும் மனைவியும் பிரிந்திருப்பவர்கள், சொந்த இடத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பவர்கள் ஆகியோர் பெரும்பாலும் அடங்கியிருக்கின்றனர் என்றும், இவர்களில் 1000 பேரை இடமாற்றம் செய்யத் தகுதியுடையோராகக் கருதப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட 1000 பேர்களைக் கொண்ட பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுகிறது. இவர்களுக்கு அக்டோபர் 2-ந் தேதி இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும். இடமாற்றம் சம்பந்தமாக எவ்வித பேட்டியும் பலனளிக்காது என்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## அமெரிக்க ஏவாயுதம்

வாஷிங்டன், ஆக. 9

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் புதிய ஏவு கருவியொன்றை அமெரிக்கா வெற்றிகரமாகப் பரீட்சை செய்துள்ளது.

மணிக்கு 15,000 மைல்கள் செல்லக்கூடிய இந்த ஏவு கருவி 5000 மைல் தூரம் சென்றது.

## லண்டன் பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்கள்

### இலங்கை பல்கலைக்கழகத்தில் பரீட்சை எடுக்கலாம்

கொழும்பு, புதன்

லண்டன் சர்வகலாசாலைப் பட்டதாரிச் சோதனைக்குத் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ள மாணவர்களுக்கு இலங்கைச்சர்வகலாசாலையில், வெளிமாணவர்களுக்கான பரீட்சைகள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அப்படி அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கென்று சர்வகலாசாலையில் வாசிகசாலை வசதியோ அல்லது விரிவுரை வசதியோ அளிப்பதற்கில்லையென்றும் தங்களுக்கு இந்த வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும்படி சர்வகலாசாலை உபவேந்தரை அவர்கள் கேட்டுக்கொள்வார்கள் என்றும் சர்வகலாசாலை உதவி ரிஜிஸ்ட்ரர் திரு. வெட்டசிங்கி அறிவித்தார்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.



சுகாதாரத்திற்கு — சுவையான ஆகாரத்திற்கு

## தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்

விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.



### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### தேவை

எங்கள் சங்கத்தில் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் மின்சார போமன் வேலைக்கும், மற்றும் மோட்டார், டீசல் என்சின் வேலைக்கும் பயிற்சி அளிக்கிறோம். பயிற்சி முடிந்ததும் தராதரப் பத்திரம் வழங்கப்படும். ஜே. எஸ். சி. ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்றவர்கள் விண்ணப்பிக்கவும், காரியதரிசி, கைத்தொழில் பொறியியல் சங்கம், 14, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

### உடன் தேவை

எங்கள் மோட்டார் காராச்சிற்கு ரொக்கப் பிணை கட்டக்கூடிய ஆங்கில அறிவுடைய காசியர் கிளாக் தேவை, உடனே வேலை பாரம் எடுக்கக் கூடியவர்கள் விண்ணப்பிக்கவும், காரியதரிசி, கைத்தொழில் பொறியியல் சங்கம், 14 சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

### கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர் E L 3253 சொந்தப் பாவிப்பு — அசல் நிலமை நேரில் பார்வையிடவும்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### ரயில் நேரம்

**யாழ்ப்பாணம் — கோட்டை**
* காலை 5-42 - பி. ப. 1-22
**பி. ப. 2-25 - இரவு 10-15
மாலை 6-40 - காலை 5-05

**கோட்டை — யாழ்ப்பாணம்**
**காலை 6-00 - பி. ப. 1-23
*பி. ப. 2-05 - இரவு 9-52
மாலை 7-15 - காலை 5-05
* 'உத்தரதேவி'
** 'யாழ்தேவி'


### கூட்ட அறிவித்தல்

வேலணை கிராமச் சபை

ஐயா,

வேலணை கிராமச் சபையின் மாதாந்தர பொதுக் கூட்டமொன்று 1961-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ம் திகதி மாலை 2 மணிக்கு மேற்படி சபைக் காரியாலயத்தில் அக்கிராசனர் ப. கந்தசாமி தலைமையில் நடைபெறும். அத்தருணம் இதன் கீழ்க் குறிப்பிட்ட விஷயங்களை ஆலோசிப்பதற்குத் தவருது சமுகமளிக்கும்படி தயவாக வேண்டுகிறேன்.

ப. கந்தசாமி
அக்கிராசனர்
வேலணை கிராமச் சபை.

**விஷயங்கள்**

1. சென்ற கூட்ட வரலாற்றுக் குறிப்பை வாசித்து ஏற்றுக் கொள்ளல்.
2. அக்கிராசனரின் அறிக்கை.
3. செய்து முடிந்த வேலைகளினது பணம் கொடுத்தல்.
4. முன்னறிவித்தல் பிரேரணைகள்.
5. கடிதங்கள்.
6. வேலை கட்டுப் பணங்கள் திருப்பிக் கொடுத்தல்.

திகதி 7-8-61.


நாவலப்பிட்டி, செவ்வாய்

மலைநாட்டிலுள்ள அன்பர்களைக் கொண்ட யாத்திரைக் கோஷ்டியொன்று இம்மாதம் இருபதாம் திகதி நாவலப்பிட்டியிலிருந்து புறப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள முக்கிய ஸ்தலங்களையும், பெரியார்களையும் தரிசிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இவகளுர்க்கு பல்வேறிடங்களிலும் உபசரணைகள் அளிக்கப்படுமெனவும் தெரிகிறது.




# 'வேலையில்லாப் பிரச்சினை நீங்க சாரணர் முகாம்கள்
## சாரணக்கமிஷனர் கருத்து

### தேசிய ஒற்றுமை வளர கல்வி உதவவேண்டும்
—எம். பி.

மாத்தளை, புதன்

"தேசிய ஒற்றுமையை வளர்க்காவிடில் இந்த நாட்டின் எதிர்காலம் இருளடைந்துவிடும்" என அக்குரூஹ எம். பி. ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீது இங்குள்ள சென்ட் தோமஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவின்போது கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது:—

பாடசாலை வகுப்பறையிலிருந்தே தேசிய ஒன்றுமை ஆரம்பமாகவேண்டும். மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட் குறுகிய எல்லைக்குள் வளராமல் விரிந்த மனப்பான்மையுடன் சிறுவர்கள் வளர்வதற்கான சூழ்நிலையை அமைக்க உதவவேண்டும் பாடசாலையில் பயிலும்போதே ஐக்கிய இலங்கையை உருவாக்கக் கூடிய கல்வி சிறுவர்களுக்குப் போதிக்கப்படல் வேண்டும்?"

இவ்விழாவுக்கு இளைப்பாறிய கல்லூரி உப அதிபர் ஜே. வி. ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

### கமுகை அழிக்க வேண்டாம்

வெல்லம்பிட்டி, புதன்

"கமுகின் பூக்களை அர்ப்பணித்து புத்த பெருமானை வழிபடுவதை விட, விளக்குமாறு ஈக்கிலைக் கொண்டு வழிபடுவது அதைவிடச் சிறந்தது" என வெள்ளவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்திலுள்ள புதிய பால் விநியோக நிலையத்தை திறந்துவைத்துப் பேசுகையில் கலுகொன்டயவி பன்னசிகாற தேரோ கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:- "பாக்கு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. சில பௌத்த மதத்தவர்களின் மூடத்தனத்தினுல்தான் இந்த நிலை இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது. புத்த பெருமானை வணங்குவதற்காக, பௌத்தர்கள் கமுகின் பூக்களை அழிக்கின்றனர். வேறு சிலர் பந்தல்கள் போடுவதற்காக கமுகு மரங்களை வெட்டி அவற்றைப் பாழாக்குகின்றனர். இந்த மூடக் கொள்கை பௌத்தர்களிடமிருந்து அகலவேண்டும்."

### 'வானில்' ஒன்பதுபேர் பிரயாணம் செய்ய அனுமதி

கொழும்பு, புதன்

சட்டப்படி, ஒரு 'வானில்' ஏழு பேர் மட்டுமே பிரயாணம் செய்வதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது. இனிமேல் 'வான்' ஒன்றில் சாரதி உட்பட ஒன்பது பேர் பிரயாணம் செய்ய உத்தரவு அளிக்கப்பட்டிருக்கிறது என்று தொழில் தேசியமய உதவி மந்திரி திரு. எம். பி. டி' இஸற். ஸ்ரீவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல அரசாங்க எம். பி. க்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக இதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காகத் தாம், பொலிஸுக்கு உத்தரவு பிறப்பிக்கப் போவதாகவும் உதவி மந்திரி தெரிவித்தார்

கிளிநொச்சி, செவ்வாய்

"சாரணர் முகாம்களை ஒவ்வொரு தொகுதிகளிலும் எமது எம். பிக்கள் நிறுவுவார்களேயானுல் இன்றைய வேலையில்லாத திண்டாட்டத்தை போக்க முடியும்" என்று கிளிநாச்சி ரொட்ரிக்கோ பூங்காவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் கோஷ்டி அமைத்த முகாமைத் திறந்து வைத்துப் பேசும்போது வடபகுதி சாரணக் கமிஷனர் திரு. வி. ஜெயரத்தினம் கூறினுர்.

திரு. ஜெயரத்தினம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

சாரணியம் காலனி ஆட்சி காலத்திலிருந்த காலங்தப்பிய ஒன்றென மக்களுக்கிடையே ஓர் தப்பபிப்பிராயம் நிலவுகின்றது. சாரணிய இயக்கம் உயர்ந்த எண்ணத்தையும் மேலான நிலையையும், கௌரவத்தையும் நாட்டு இளைஞர்களுக்கிடையே பதியவைபபதெனவும் இந்த இயக்கம் அகிலம் முழுதிலும் சுடர்விட்டொளிவிடுவதெனவும், சாரணர்கள் தமக்கும், மற்றையோர்க்கும் உதவி செய்வதற்குப் பயிற்றப்படுகிருர்களெனவும் பேடன் பவல் பிரவு கூறியிருப்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திருவாளர்கள் வி. சிவசுப்பிரமணியம், எஸ். முத்துக்குமாரன் ஆகியோரது தலைமையில் சென்ற இக்கல்லூரி சாரணர் கோஷ்டி ரொட்ரிகோ பூங்காவில் மூன்று தினங்கள் முகாமிட்டிருப்பார்கள்.

இக்கோஷ்டியினர் இங்குள்ள இளைஞர் விவசாயக் கழகங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி உதவி இன்ஸ்பெக்டர் திரு. நிஜாம் போக்குவரத்தும் இளைஞர்களுக்கிடையே இருக்க வேண்டிய ஒழுங்கும்" என்பது பற்றி இவர்கள் மத்தியில் பேசும்போது வீதிகளில் மாணவ உலகம் ஒழுங்கைக் கடைப்பிடிப்பார்களானுல் அதிகமான வீதிவிபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாமெனச் சொனனுர்.

### அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கம், சங்க மண்டபம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இம் மண்டபத்தை அமைப்பதற்கான காணியை யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்திற்கு அருகாமையிலுள்ள நிலத்தில் வழங்குவதற்கு மேயர் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நோக்கத்துக்கு யாழ்ப்பாண மாநகர சபையும் தனது இணக்கத்

தையும் அங்கீகாரத்தையும் அளிக்குமென இச்சங்கம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

### சஞ்சலம் வேண்டாம்
#### மந்திரி உபதேசம்

அத்தனகலை, புதன்

"சில உணவுப் பொருள்களின் விலையை அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. ஒரு பகுதியினரிடமிருந்து புதிய வரிகளைச் சேகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இந்த நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை விருத்தி செய்வதற்காகவே அரசாங்கம் இப்படியான திட்டங்களை விதித்திருக்கிறது".

திஹாரியா முஸ்லிம் பாடசாலை ஆய்வு கூடமொன்றின் கல்நாட்டு விழாவில் கலந்து கொண்ட கல்வி மந்திரி திரு. பதியுத்தீன் மாமூத், தமது தலைமையுரையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் முன்னேற்றம் கருதி விதிக்கப்பட்டிருக்கும் இவ் வரிகளினுல், நாம் சிறிது கஷ்டத்தை அனுபவித்தாலும் அதைக் கண்டு நாம் சஞ்சலம் அடையக் கூடாது. இப்புதிய வரிகள் பொது மக்களை அதிகமாகப் பாதிக்கக்கூடியவரையில் அமையவில்லை" என்று அவர் மேலும் கூறினுர்.

### தேவையான ஆதரவு கிடைத்தது

நியுயார்க், ஆக 2

பிஸர்ட்டா சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற்கு ஐ. நா. பொதுச்சபையைக் கூட்டவேண்டுமென்ற ஆசிய ஆபிரிக்க நாடுகளின் கோரிக்கைக்கு ஐம்பதுக்கதிகமான நாடுகளை ஆதரவு தெரிவித்துள்ளன.

38 ஆசிய ஆபிரிக்க நாடுகள் 4 லத்தின் அமெரிக்க நாடுகள், 9 கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவைகளும் யூகோஸ்லேவியாவும் ஆதரவு தெரிவித்துள்ளன. மெக்ஸிக்கோவும் ஆஸ்திரேலியாவும் ஆதரவு தெரிவித்துள்ளனவாம்.

ஐ. நா. விசேஷ கூட்டத்தை இமெரிக்கா ஆதரிக்கவில்லை.

### உடுப்பிட்டி எம். பி. இந்தியா செல்வார்

உடுப்பிட்டி, புதன்

இவ்வாண்டு இறுதியில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் சமய, கலாசார நோக்கமாகத் தென்னிந்தியா செல்லவிருக்கிருர்.

இவர் தென்னிந்தியாவிலுள்ள பல புனித தலங்களைத் தரிசிப்பதுடன் அடையாறு கலாஷேத்திரத்துக்கும் விஜயஞ் செய்வார்.


### ஓர் அரிய சந்தர்ப்பம்!

கார் ஓட்டுவதற்குப் பழகுங்கள். இருபதே நாட்களில் நீங்கள் கார் ஓட்டுவதற்குப் படித்து "லைசன்ஸ்" எடுக்கவேண்டுமானுல் இன்றே எம்மிடம் வாருங்கள்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

## ராஜா டிறைவிங் ஸ்கூல்

132, பேராதனிய றோட். கண்டி

மேல் பகுதியில் உள்ளவர்களுக்கு

## ஆம்ஸ் ஹோட்டல் பில்டிங்

மல்லியப்பூ, ஹட்டன்.

# ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம்

## அடுத்தவாரம் கூடுவது நிச்சயம்

நியுயோர்க், ஆக. 9

பிஸர்ட்டா நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் இவ்வார இறுதியில் அல்லது அடுத்தவார ஆரம்பத்தில் நடைபெறுவது நிச்சயமாகிவிட்டதாகக் கருதப்படுகிறது.

பிஸர்ட்டா தகராறுபற்றி விவாதித்து ஒரு தீர்வுகாண்பதற்காக ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று ஐ. நா. விலுள்ள ஆசிய-ஆபிரிக்கக் குழு கோரியுள்ளது.

99 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுச்சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு 50 நாடுகளின் ஆதரவு தேவை. இதுவரை 49 நாடுகளின் ஆதரவை ஆசிய-ஆபிரிக்க குழு பெற்றுக்கொண்டது. பொதுச்சபையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டுமாறும் அவைகள் ஐ. நா. பொதுக்காரியதரிசியைப் பூர்வாங்கமாகக் கேட்டுள்ளனர்.

பிஸர்ட்டாவிலுள்ள சடற்படைத் தளத்திலிருந்து பிரஞ்சுப் படைகள் வெளியேற வேண்டுமென்று டுனிஷியா கோரியிருந்தது. இதற்குப் பிரான்ஸ் இணங்கவில்லை. மேலும் துருப்புக்களை பிஸர்ட்டாவுக்கு அனுப்பியதாகக் கூறப்பட்டது. படைகளைத் திருப்பிப் பெருவிட்டால் தாம் நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படுமென்று டுனிஷிய அதிபர் ஜெனரல் யோகிபா எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி பிஸர்ட்டா கடற்படைத் தளத்திலுள்ள பிரஞ்சுத் துருப்புக்கள் வேறு இடங்களுக்கு நடமாட முடியாதபடியும், தளத்துக்கு உணவு முதலியவைகள் போய்ச்சேர முடியாதபடியும் சாலைகள் அடைக்கப்பட்டன. இச்சமயத்தில் டுனிஷியத் துருப்புக்களுக்கும் பிரஞ்சுத் துருப்புக்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. பிரஞ்சுத் துருப்புக்கள் கடுமையாகத் தாக்குதல் நடத்தியதில் எராளமான டுனிஷிய துருப்புக்களும் பொதுமக்களும் மாண்டனர்.

பிஸர்ட்டா நிலைமை மோசமாகிவருவதாகவும் பிரஞ்சுப் படையினர் பிஸர்ட்டா நகரத்தை ஆக்கிரமித்துக்கொண்டு மோசமான ஆயுதங்களால் தாக்குதல் நடத்திவருவதாகவும் ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு டுனிஷியா புகார் செய்தது.

டுனிஷியாவின் புகார்பற்றி ஆராய்வதற்காக பந்தோபஸ்து சபை அவசரமாகக் கூடியது. இக்கூட்டத்தில் பிரான்சும் டுனிஷியா மீது எதிர்ப்புகள் தெரிவித்தது

பிஸர்ட்டாவில் உடனடியாகச் சண்டையை நிறுத்த வேண்டுமென்றும் சண்டைக்கு முன்னர் இருந்த பழைய நிலைகளுக்கு இரு தரப்பு துருப்புகளும் திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்றும் பந்தோபஸ்து சபை ஒரு தீர்மானத்தின் மூலம் பிரான்சுக்கும் டுனிஷியாவுக்கும் உத்தரவிட்டது.

இதற்கிணங்க சண்டை உடனடியாக நிறுத்தப்பட்டதென்றாலும் இருதரப்பு துருப்புக்களும் பழைய நிலைகளுக்கு திரும்பிச் செல்லவில்லை. சண்டை நிறுத்தம் பற்றி ஒரு நிரந்தர உடன்பாட்டுக்கும் வரமுடியாது போய்விட்டது.

பிஸர்ட்டா நிலைமை மேலும் மோசமாகவே இருக்கிறதென்றும் பிஸர்ட்டா நகரில் பெரும் பகுதியை பிரஞ்சுப் படையினர் பிடித்துக்கொண்டனரென்றும் பிரஞ்சுப் படைகளை அங்கிருந்து வெளியேற்றும்படியும் டுனிஷியா மீண்டும் கோரியது. பாதுகாப்புச் சபை இதுபற்றி விவாதிக்க மீண்டும் கூடியது. ஆனல் எந்த ஒரு தீர்மானத்துக்கும் வரமுடியாதுபோனது.

பாதுகாப்புச் சபை பிஸர்ட்டா சம்பந்தாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டதால் இதுபற்றி விவாதித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஐ. நா. பொதுச்சபையை அவசரமாகக் கூட்ட வேண்டுமென்று ஆசிய ஆபிரிக்க குழு கோரியுள்ளது.

---

## சினிமா நடிகர்கள் ஜாகர்த்தா விஜயம்

ஜக்காதரா புதன்

இன்று நடைபெறவிருக்கும் இந்திய சினிமாப்பட விழாவில் கலந்துகொள்வதற்கென ஆறு சினிமா நட்சத்திரங்கள் ஜக்காத்ரா வந்துள்ளனர். அவர்கள்: செல்வி நந்தா, திருமதி மண்டுட், ஆர்.கணேஷ், ஜொர்னி வாக்கர், சாபி பிஸ்வஸ் திருமதி சாவித்திரி கணேஷ், ஆகியோராவர்.

---

## 40,000 பேருக்கு 3 அந்தர் கருவாடு!

நாவலப்பிட்டி, செவ்.

நாவலப்பிட்டி, ஹட்டன், பொகவந்தலாவ, மஸ்கேலியா நகரங்களில் கருவாடு வாங்குவோர் 40,000 பேர் உளர். ஆனல் இவர்கள் கருவாடு வாங்கும் உட புலத்கம கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் 3 அந்தர் கருவாடே இருந்தபடியால் பலர் கருவாடு வாங்க முடியவில்லை.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தபாபனங்களில் இந் நிலை ஏற்படுவதால் கள்ளச் சந்தைக்காரர் இங்கு தமது விருப்பப்படி கொள்ளை லாபமடிக்கின்றனர். ஒரு ருத்தல் கருவாடு ரூ. 1-60—1-80வரை விற்பனை செய்கின்றனர்.

---

## "உரிமை அளிக்க வேண்டும்"

பதுளை, புதன்

"இந்நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் காலம் தாழ்த்தாது சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் குடியுரிமை, வாக்குரிமை வழங்க 'வேண்டும்" என்று பதுளை மாவட்ட லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பிரதிநிதி திரு. என். ஆர். பழனியாண்டி அட்டாமபிட்டி முதலாவது டிவிஷனில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

யூனியன் பொதுக் காரியதரிசி திரு. எஸ். செல்லையா தலைமை தாங்கினர்.

"தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்குச் செய்த சேவையை மறந்து யு.என்.பி.யினர் நாடற்றவர்களாகச் செய்தார்கள். அதைத் தொடர்ந்து இந்திய அரசாங்கமும் தொழிலாளர்கள் இந்திய மண்ணில் அடி எடுத்து வைக்கமுடியாதபடி தடைவிதித்துள்ளது. இந்த இரண்டும் கெட்டான் நிலைமையில் 12 வருடமாக அவதிப்படும் தோட்டத் தொழிலாளர்கள் எப்போது விமோசன மடைவார்கள்?" என்று திரு. பழனியாண்டி கேட்டார்.

அடுத்துப் பேசிய இணைப் பிரதிநிதி திரு. வி. சு. ராஜா கூறியதாவது:-

---

## நடுத்தர வகுப்பினர் தாங்கமுடியாத வரிச் சுமை!

யாழ்ப்பாணம், வியாழன்

"ஏழைமக்களினதும், தொழிலாளர்களினதும் ஆதரவைக் கொண்டே ஆட்சியுரிமையைப் பெற்றேமெனவும் சமத்துவக் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறேமெனவும் கூறிக்கொள்ளும் அரசாங்கம் ஏழை மக்களும் தொழிலாளரும் செலுத்த முடியாத வரிகளை அவர்கள் மீது சுமத்தியிருப்பது மிக ஆச்சரியமாய் இருக்கிறது."

இவ்வாறு யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கம் எம். பி.க்களுக்கு விடுத்த வேண்டுகோளில் கேட்டுள்ளனர். அத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

வரி அதிகரிக்கப்படவேண்டுமென்னும் பிரேரணைக்கு முன்பும் புளி, பம்பாய் வெங்காயம், மல்லி, கோப்பிக்கொட்டை ஆகியவற்றின் விலை சற்று ஏற்றமாகவே இருந்தது. ஏழைத் தொழிலாளர் இப்பொருள்களை வாங்கி உண்பதைக் கனவில்கூட நினைக்க முடியாதிருந்தது. இந்த நிலையில் அரசாங்கம் மாவு, தீப்பெட்டி, வெள்ளைச் சீனி, சிகரெட் ஆகியவற்றின் விலையை உயர்த்த வகை செய்திருப்பது ஏழை மக்களின் வயிற்றில் அடிப்பதுபோலாகும்.

நடுத்தர வகுப்பினரே எல்லோரிலும் மேலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுப் பொருள்களின் விலை உயர்வைச் சமாளிப்பதுமட்டுமல்லாமல் 4 சதவிகிதம் தேசிய அபிவிருத்தி வரியையும வழக்கமான வருமான வரியையும் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவ்வரி விகிதங்களை அடியோடு நீக்க வகை செய்ய வேண்டும் என்று எம். பி.க்களைக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

---

## மாணவன் தற்கொலை

பண்டாரவளை, செவ்வாய்

பண்டாரவளையைச் சேர்ந்த அட்டாம்பிட்டிய என்ற தோட்ட வாசியான அடைக்கலம் என்பவரின் மகன் இலட்சுமணன் என்ற 15 வயதுப் பையன் கடந்த வெள்ளிக்கிழமையன்று விஷமருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பிரஸ்தாப மாணவனின் தந்தை கல்வி சம்பந்தமாக ஏதோ கண்டித்துப் பேசியதாகவும், தந்தையின் சொல் பொறுக்கமுடியாமல் உடனே சென்று மாட்டுக்கொட்டகையில் வைக்கப்பட்டிருந்த விஷமருந்தை எடுத்து குடித்து தற்கொலை செய்து கொண்டாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை என்றுமரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

---

## தோட்டத்தில் கூட்டுறவுச் சங்கக்கடை

பண்டாரவளையைச் சேர்ந்த எல்லவெல தோட்ட உரிமையாளரும் துரையுமான திரு. எல். ஸி. டி. நாகாவத்தயின் முயற்சியால் மேற்படி தோட்டத்தில் ஒரு கூட்டுறவு சங்கக்கடை, திறக்கப்பட்டுள்ளது.

---

தோட்டத் தொழிலாளர்கள் உரிமைகள் பெறவேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டால் வாழ்வு. இல்லையேல் தாழ்வு என்பது பாரதியாரின் மணிவாக்கு.

---

# நடுநிலைமை மகாநாடு

## நெருக்கடியைத் தணிக்கும்

## யூகோ, கானு அதிபர்கள் நம்பிக்கை

பெல்கிரேட், ஆக. 9

"அடுத்தமாதம் பெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் வல்லரசுக் கோஷ்டிகள் எதையும் சாராத நடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் மகாநாடு, உலக நெருக்கடியைத் தணித்து சமாதான ஒத்துழைப்புககு வழிவகுக்கும்" என்று கானு அதிபர் டாக்டர் நிக்ருமாவும், யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்

மார்ஷல் டிட்டோவும் டாக்டர் நிக்ருமாவும் பேச்சுவார்த்தை நடத்தியபின் பெல்கிரேட்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சமாதானத்துக்கு ஐ. நா. ஸ்தாபனம் இன்னும்சிறந்த முறையில் பணியாற்றவேண்டுமென்று தாங்கள் கருதுவதாகவும் அவர்கள் அந்த அறிகையில் குறிப்பிட்டுள்ளனர்.

பிஸர்ட்டா விவகாரத்தில் டுனிஷியாவின் நிலையை தாங்கள் ஆதரிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## காங்கோ பார்லிமெண்ட்

### முதல் தடவையாக பகிரங்க கூட்டம்

லியப்போல்ட்வில்லி, ஆக. 9

சென்ற ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த காங்கோ பார்லிமெண்டின் இருசபைக் கூட்டங்களும் அந்தரங்கமாகவே நடைபெற்றுவந்தன. காங்கோ பார்லிமெண்டின் கீழ்சபைக் கூட்டம் நேற்று முதல் தடவையாக பகிரங்கமாக நடைபெற்றது. இக் கூட்டத்தில் கடாங்காவிலிருந்து வந்த ஏழு பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவில்லை. இவர்கள் லியப்போல்ட்வில்லியில் ஐ. நா. துருப்புக்களின் பாதுகாப்பிலுள்ளனர்.

காங்கோலிய இராணுவத்தை ஐக்கியப் படுத்துவதுதான் தமது அடுத்த நடவடிக்கை என்று காங்கோவின் புதிய பிரதமமந்திரி திரு. அடௌலா தெரிவித்தார்.

திரு. அடௌலாவின் அரசாங்கத்துக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுமாறு தமது துருப்புக்களுக்கு தாம் உத்தரவிட்டிருப்பதாக காங்கோலிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மோபுத்து கூறினர்.

---

## மேற்கு பேர்லினில் கிழக்கு ஜேர்மன் அகதிகள்

பொன், ஆக. 8

கிழக்கு ஜெர்மனியிலிருந்து நேற்று மட்டும் 1741 அகதிகள் மேற்கு பேர்லினில் பிரவேசித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. 1953-ம் ஆண்டுக்குப்பின் இவ்வளவு பெருந்தொகையானேர் மேற்கு பெர்லினுக்குள் பிரவேசித்ததில்லையெனக் கூறப்படுகிறது. கையில் அகப்பட்ட உடமைகளை அல்லது பணத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் வந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

---

## கென்னடி ஆலோசனை

வாஷிங்டன், ஆக. 9

அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி தமது தேசிய பாதுகாப்புச் சபை உயர்தர ஆலோசகர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினர்.

பேர்லின் பிரச்னை சம்பந்தமாக அவர்கள் ஆலோசனை செய்ததாகக் கூறப்படுகிறது.

திரு. குருஷ்சேவ் நேற்று முன் தினம் வானெலியிலும் டெலிவிஷனிலும் நிகழ்த்திய உரைபற்றி அவர்கள் விவாதிக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது,

---

## சிமெந்து தொழிற்சாலை

### திருடியதாக வழக்கு

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த வி. இரத்தினசிங்கம், ஏ. கந்தையா, பி. கணேஷ், வி. விசுவநாதன், ஏ. சொக்கலிங்கம், ஆகிய ஐவரும் அதே தொழிற்சாலையில் 300 ரூபாய் பெறுமதியான டயர் ஒன்றைத் திருடியதாக காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நிதிபதி 2-ம், 4-ம், 5-ம் எதிரிகளான ஏ. கந்தையா, வி. விசுவநாதன், ஏ. சொக்கலிங்கம் ஆகியோரை இவ் வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

காங்கேசன்துறைப் பொலிசார் முதலாம், மூன்ரும் எதிரிகளான வி. இரத்தினசிங்கம், பி. கணேஷ் ஆகியோரின்மேல் புதிய வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்

விசாரணை இம்மாதம் 21-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான மின்சாரக் கம்பிகளை திருடியதாக மேற்கூறிய ஐந்து பேர்கள் மேலும் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட மற்றுமோர் வழக்கில் ஐந்து எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்றனர்.

இதன் விசாரணையும் இம்மாதம் 21-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

எஸ், பாலசிங்கம் முதலாவது எதிரியின் சார்பிலும் ரி. தம்பிரட்ணம் இரண்டாவது எதிரியின் சார்பிலும், ஆர், விஸ்வநாதன் மூன்ருவது எதிரியின் சார்பிலும், ஆர். ஜே. செல்வரட்ணம் நான்காம் எதிரியின் சார்பிலும், ஏ. சொக்கலிங்கம் ஐந்தாம் எதிரிக்காகவும் ஆஜரானர்கள்.

---

## கிழக்கு ஜேர்மன் பார்லிமெண்ட்

லண்டன், ஆக. 9

கிழக்கு ஜேர்மன் பார்லிமெண்டின் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் ஜேர்மன் சமாதான ஒப்பந்தம் பற்றி விவாதிக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

---

## இன்று மாவிட்டபுரம் தேர்

மாவிட்டபுரம், புதன்

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் வருடாந்த தேர் உற்சவம் நாளை நடைபெறும். இத்தினத்தன்று விசேஷ பஸ் போக்குவரத்து வசதிகளை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மல்லாகக் கிளை செய்துள்ளது. வெள்ளிக்கிழமை கீரிமலையில் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

---

## டீன்ரஸ்க் ஜப்பான் செல்வார்

வாஷிங்டன், ஆக. 9

அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்ரஸ்க்கும் மற்றும் ஐந்து மந்திரிகளும் இவ்வருடம் நவம்பர் மாதம் ஜப்பானுக்கு விஜயம் செய்து பொருளாதார உதவிபற்றியும் வர்த்தகத்தொடர்பு பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவர்.

**மணிவாக்கு**

"ஒருபொழுதும் துன்பமாக மாருத பொருள் ஒன்று உண்டு. நாம செய்யும் நற்செயலே அது"


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 26உ (10 8 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பெல்கிரேட் மகாநாடு

நடுநிலைமை நாடுகளின் மகாநாடு யூகோஸ்லாவியாவின் தலைநகரமாகிய பெல்கிரேட்டில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்றது. யுத்த அபாயமும் உலக நாடுகளின் நெருக்கடியும் அதிகரித்துக்கொண்டுவரும் இந்நாட்களில் இம் மகாநாடு பலவிதத்திலும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகும்.

நடுநிலைமை நாடுகள் தங்கள் பாட்டில் எவ்வித கவலையுமின்றி ஒதுங்கியிருக்க முடியாதெனவும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கட்டுப்பாட்டுடன் எதிர்த்தால்தான் உலகத்துக்கு அழிவு ஏற்படாமல் தடுக்க முடியுமெனவும ரஷ்யப் பிரதமர் குருஷேவ் நடுநிலைமை நாடுகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை அந்நாடுகளின் தலைவர்கள் அசட்டை செய்துவிட முடியாது.

இம்மகாநாட்டில் சுமார் முப்பது நாடுகள் கலந்துகொள்ளுமெனத் தெரிகிறது. இவற்றுடன் மேலும் இருபத்தைந்து நாடுகளுக்கு அழைப்புக்கள் அனுப்பவேண்டுமென இந்தியப் பிரதமர் கேட்டுக்கொண்டார். நேருஜியின் வேண்டுகோளை ஆமோதித்து மேலும் எட்டு நாடுகளுக்கு அழைப்புக்கள் அனுப்பபட்டிருப்பதாகத் தெரிகின்றது. இன்றைய சூழ்நிலையில் நேருஜி தெரிவித்தது போல இருபத்தைந்து நாடுகளுக்கும் அழைப்புக்ள் அனுப்பினும் அது வரவேற்கத்தக்கதொன்ருகவேயிருக்கும்.

இம்மகாநாடு உலக விவகாரங்களில் முக்கிய கருத்துக்களைத் தெரிவித்துத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்குமாகையால் இந்தியப் பிரதமர் கேட்டுக்கொண்டவாறு இதற்கு வலுவூட்டுவது மிக அவசியமாகும். பெல்கிரேட் மகாநாட்டில் முப்பது நாடுகள்வரை கலந்துகொள்ளுமென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பர்மாவின் பிரதம மந்திரி ஊநூவும், இந்தோனேஷியாவின் அதிபர் சுகர்ணேவும் இம்மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னதாக இந்தியப் பிரதமர் நேருவுடன் கலந்தாலோசிப்பார்கள் எனத் தெரிகிறது.

இம்மகாநாட்டைத் தொடர்ந்து வல்லரசுகளின் மகாநாடும் விரைவில் நடைபெறவிருக்கின்றது. சர்வதேச நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்துகொண்டு வருவதுடன், அமெரிக்காவும் பிரிட்டனும் எத்தனையோ விஷயங்களில் ஒன்றுகொன்று முரண்பட்டுக்கொண்டு நிற்கின்றன. பேர்லின் நெருக்கடியே மூன்ருவது உலக யுத்தத்துக்கு அடிகோலிவிடுமோ என்ற பயம் வேறு. இந்நிலையில் இம்மகாநாட்டுக்கு மேலும் பல நாடுகளை அழைத்து இதனை விஸ்தரிப்பது நடுநிலைமை நாடுகளுக்கு வலிமையூட்டுவதாகும்.

தேசிய கல்விக் கமிஷனுக்கு பண்டிதர் பட்டதாரிகள் சங்கம் மகஜர்

# கல்விச்சுதந்திரம் நாட்டின்

## பொருளாதாரத்தை வளர்க்கும்

## தோட்டப்பாடசாலைகளும்தேசிய கல்வித்திட்டத்துள் கொண்டுவரப்படவேண்டும்

"சனநாயக அமைப்பில் கல்விச் சுதந்திரம் அவசியம். கல்விச் சுதந்திரமே நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கக் கூடியதெனக் கொள்வது தவறல்ல. காலப் போக்கில் ஒவ்வொரு துறையிலும் விற்பன்னர்களையும் மேதைகளையும் சிருஷ்டிக்கக் கூடியது கல்விச் சுதந்திரமே." இவ்வாறு அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்கம், தேசிய கல்விக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டிருக்கின்றது.

இம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மாணவனின் தாய்மொழியே பாலர்வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம்வரை போதனமொழியாக அமையவேண்டும். மொழி கற்பிக்கும் ஆசிரியர் உயர்ந்த கல்வித் தராதரமும் மொழிகளில் பாண்டித்தியமும் பெற்றவராக இருப்பது அவசியம். ஆங்கிலம் தொடர்ந்து தொழில் நுட்பம், விஞ்ஞானம் முதலிய பாடங்கள் போதிக்கும் மொழியாகச் சிறிதுகாலம் இருப்பது சாலச்சிறந்தது. ஆனல் உடனடியாக விஞ்ஞானம். தொழில் நுட்பம் முதலிய பாடங்களும் சுயமொழிகளில் போதிக்கப்படல் வேண்டும்.

சிலருக்கு மட்டும் கல்வியூட்டும் கவலைக்கிடமான நிலைமை மாறி எல்லா மாணவர்க்கும் உயர்தரக் கல்வியிலும், தொழிற் கல்வியிலும் சமசந்தர்ப்பம் அளிக்க வேண்டியது தேசிய கல்வித் திட்டத்தின் ஒரு பிரதான நோக்கமாக வேண்டும். உருவாக்கப்படவிருக்கும் தேசியக் கல்வித் திட்டம், நாட்டின் பிரதான தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்கதாகவும், நாட்டின் முழு அபிவிருத்திக்கும் வழி வகுப்பதாகவும், நமது பாரம்பரிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் அமையவேண்டும். "இருமொழிகள்—ஒரே எண்ணம், மூன்று இனங்கள்—ஒரே நாடு" என்பதே எமது தாரக மந்திரமாக இருக்கவேண்டும். இவ்விதம் ஒரு தேசியக் கல்வி பயில்வோர் தமக்கும் சமுதாயத்திற்கும் பயனுடையோராய் வாழச் செய்தல் அவசியம். இவர்கள் தொழிற்றகவல் பெறவும், தமது கரிசனை, திறமை, தகுதிக்கேற்ற தொழிலைத் தெரிவு செய்யவும், தொழிலில் அமரவும், தொழிலில் அனுசரணையாக இருக்கிருரா எனபதைத் தொடர்ந்து கவனிக்கவும் வசதிகளேற்படுத்த வேண்டியதவசியம்.

முற்போக்குள்ள நாடுகளிலுள்ள சனநாயக கோட்பாடுகளுக்கும் பாரம்பரியத்திற்கும அமைய ஒவ்வொரு மாணவனும் தான் கல்வி பயிலவிரும்பும் பாடசாலையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

ஆங்கிலப் பாடசாலைகளுக்கும் சுயபாஷா பாடசாலைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் ஒழிவதோடு இன்றைய சுயபாஷா பாடசாலைகள் உயர்தர பாடசாலைகளாகக் கருதப்பட்டு கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் எல்லா வசதிகளும் இப்பாடசாலைகளுக்கும் வழங்கப்படல் வேண்டும். பிற்போக்கான கிராமப் பகுதிகளில் மாணவர்கள் தொகையைக் கவனியாது பலவித பாடசாலைகளும் நிறுவப்பட வேண்டும்.

### தோட்டப் பாடசாலைகள்

இந்நாட்டின் முக்காற்பங்கு தேசிய வருமானத்துக்குப் பொறுப்பாயுள்ள தோட்டத் தொழிலாளிகளின் கல்வி அபிவிருத்தி கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வருவது ஆழ்ந்த வருத்தத்திற்கும் வெட்கத்துக்குமுரிய விடயமாகும். அவர்களைக் கல்வித்துறையில் தீண்டப்படாதவர்களாகக் கருதும் மனப்பான்மை ஒழிந்து அவர்களுடைய பாடசாலைகள் தேசியக் கல்வித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மேலும் தோட்டப்பகுதிக் குழந்தைகள் தத்தம் தாய் மொழிமூலம் கல்வி பயிலும் வசதி இருக்க வேண்டும்.

### கூட்டுக் கல்வி

கூட்டுக் கல்வி சர்ச்சைக்குரிய தன்மையினல் வழுக்கும் இயல்புள்ள நிலம் போன்றது. நாங்கள் இவ்விஷயமாகத் தீர்க்கமாகச் சிந்துத்து, உளநூல் வல்லுநர்களால் புயற்பருவம்—கொந்தளிக்குங்காலம் என வருணிக்கப்பட்ட 14—18 வயதிற்கிடைப்பட்ட காலத்திற்கு, இலங்கையிற் கூட்டுக் கல்வி அளிப்பது விரும்பத்தக்கதல்ல என்ற முடிபுக்கே வந்துள்ளோம். எனவே கூட்டுக்கல்வி சிரேட்ட நிலையில், விரும்பத்தகாத — வரவேற்க முடியாத ஒரு விடயம் என்று திட்டவட்டமாகக் கூறுகிருேம். ஆனல் மாணவர்கள் பொறுப்புணர்ச்சியும், தாங்களாகவே சிந்தித்துச் செயலாற்றும் தன்மையுள்ள சர்வகலாசாலை நிலையில் நாம் இதை வரவேற்கிருேம்.

### பாடவிதானம்

இலங்கைக்குப் பொருத்தமான பாடவிதானம் சமூகத்தை மையமாகக் கொண்டதும், தொடர்பான பாடங்களை மையமாகக் கொண்டதுமாய பாடவிதானங்களின் பிணைப்பே ஆகும். அன்றியும் அப்பாடவிதானத்தில் தொழில் வழிகாட்டி ஆலோசக ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் மாணவர்கள் பாடங்களைத் தெரியு முரிமையும் இருக்க வேண்டும்.

### வழி காட்டுதல்

அரசாங்கத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைக்கிணங்க, தொழில் வழி காட்டுதலுக்கும் பாடவிதானத்தில் ஒரு முக்கியஸ்தானம் அளிக்க வேண்டும். வழி காட்டுதல் இப்பாடவிதானப் பிரச்சினைகளோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது. வழி காட்டுதலின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, இருக்கின்ற பாடவிதானங்களில் மிகச் சிறந்ததொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு மாணவனுக்குதவி புரிதலே. பாடவிதானம் மாணவருடைய பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் முதலியவற்றேடு நேரடியாகத் தொடர்புடையதாயிருக்க வேண்டும்.

### சமயக் கல்வி

கல்வியின் பிரதான நோக்கங்களில் மாணவனின் குணநலன்களை, ஒழுக்கத்தை வளர்ப்பது மொன்று. இவ்வளர்ச்சிக்கு சமையக் கல்வி மிகவும் இன்றியமையாதது. சமயத்தைப் போதிப்பதோடு நாட்டிலுள்ள பல சமயங்களிடையே சகிப்புத்தன்மையையும் சினேகபான்மையான ஒற்றுமையையும் வளர்க்கக் கூடியதாக சமயக் கல்வி இருக்க வேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் சமயப் பெரியார்களின் நன்னுளைக் கொண்டாட நேரம் அளிக்கப்படவேண்டும்.

### ஆங்கிலத்தின் நிலை

மாணவனுக்கு தாய் மொழி மூலம் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கையை வரவேற்பதோடு ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகத் தொடர்ந்து வைத்திருப்பதின் முக்கியத்துவத்தையும் வற்புறுத்துகிருேம். பெரும்பான்மையான விஞ்ஞான வைத்தியப் பாடங்கள் இன்னும் ஆங்கிலத்திலேயே தங்கியுள்ளன. உன்னதமான ஆராய்ச்சி வேலைகள் ஆங்கிலத்தில் எழுதப்படுகின்றன. அன்றியும் உயர்ந்த எண்ணங்களைப் போதிப்பதற்கும், மற்றைய மேற்கிந்திய மொழிகளைப் பாவிப்பதற்கும் ஆங்கிலம் ஒரு சாதனமாகும். எனினும் எந்த மாணவனுக்கும் ஆங்கிலம் தெரியாமை அவன் அறிவைப் பெருககிக் கொள்வதற்கு இடையூருக இருக்கக் கூடாது.

### சராசரி வரவும் ஆசிரியர்கள் நியமனமும்

மாணவர்களைக் குழு முறையாகவும் தனி முறையாகவும் கண்காணிப்பதற்கு வசதியளிக்கக்கூடிய நிலையை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர்களை நியமித்தற்கு வரவுச் சராசரி கவனிக்கப்பட வேண்டும். எனவே ஆரம்ப, கனிஷ்ட, சிரேஷ்டவகுப்புகளில்முறையே 25, 20, 15 வரவுச் சாராசரிக்கு ஒவ்வோர் ஆசிரியர் வீதம் நியமிக்க வேண்டும். பின் தங்கிய பகுதிகளில் சராசரி வரவை மாத்திரம் கவனியாது வகுப்பின் எண்ணிக்கையைக் கொண்டும் ஆசிரியர்களை நியமித்தல் நன்று. பின் தங்கிய பகுதிகளில் ஒரே ஆசிரியர் ஐந்து வகுப்புகளை ஒரே நேரத்தில் படிப்பிக்கவேண்டிய நிலை மிக வருந்தத் தக்கதுடன் கல்வியின் வளர்ச்சியையும் நன்கு பாதிக்கும்.

### ஆசிரியர்களைத் தேர்ந் தெடுத்தலும் பயிற்சியளித்தலும்

இலங்கையிலுள்ள புள்ளி விபரப்படி 60,000 ஆசிரியர்கள் இருக்கிருர்கள். இவர்களில் 35,000 பேர் ஆசிரிய பயிற்சி பெருதோர். பெருந்தொகையினராகிய பயிற்றப்படாத ஆசிரியர்கள் வசம் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்தல் கல்வி விருத்திக்குகந்ததல்ல. ஆதலால் பயிற்சி பெருத ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு உடனடியாக வழிவகைகள் வகுக்கப்படல் வேண்டும். இவ்விடயத்தில் பட்டதாரிகளுக்கு மிக முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும். பள்ளிக்கூடங்களில் கல்விபயிற்றும் 2000 பட்டதாரிகளுள் 500 பேர்களே பயிற்சி பெற்றோராவர். இலங்கைப் பல்கலைக் கழகம் கூடுதலான பட்டதாரிகளைப் பயிற்சி அளிப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

### சேவை வசதிக் கட்டணம்

சாதாரண வருவாயுள்ள பெற்ருேர்க்கு சேவை வசதிக் கட்டணம் ஒரு சுமையாக இருந்தவிடத்து, மாணவரிடம் இதை அறவிடுதல் எதிர்ப்க் குரியதாகாது. இதை அறவிடுவதை நீக்கின், மாணவர்கள் இற்றைவரை பெற்று வந்த சேவை வசதிகள் தொடர்ந்து பெறுவதற்குஅரசாங்கம்ஆவன செய்யவேண்டும். சேவை வசதிக் கட்டணம் கொடாமையினல் மாணவர்களின் கல்வி எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. இதை வாங்கும் வழக்கம் தொடர்ந்திருப்பின், கனிஷ்ட, சிரேஷ்ட, உயர்தர வகுப்புகளுக்கு தனித்தனி ஒவ்வொரு வாரத்திற்கும்ஆகக் கூடிய தொகை முறையே ருபா 2, 3, 4 ஆக வசூலிக்கப்படலாம்.

ஒரு வெற்றிகரமான தேசிய கல்வியின் பிரதான தூண்களுள் முழுநேர ஆசிரியர் ஒருவர் பிறவருமானங்களில் தங்கியிராது தனது வேதனத்தைக் கொண்டு சீவியம் நடத்தத்தக்கதாக வேதனம் இருகக வேண்டும்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்புக்கோட்டை ஸ்டேஷனில் நான்கு பேர், செருப்புக்குள் 10 ஆயிரம் ருபாய் இந்தியா நோட்டுக்களை எடுத்துச் சென்று பிடிபட்டதாக நேற்று எழுதினேனல்லவா? இந்த ரகசியம் போலீசுக்கு எப்படித் தெரிந்தது? என்று ஒரு நண்பர் கேட்கிருர்.

இதைப்பற்றி விசாரித்ததில், அந்தச்செருப்புக்குள் நோட்டுக்களை வைத்துத் தைத்தவர், ரு. 500 தரும்படி கேட்டாராம். ஐம்பதுதான் தருவேன் என்று சொல்லி, ஐம்பது மட்டும் கொடுத்தனராம். இதனல் ஆத்திரமடைந்த, அந்தச் செருப்பு தைத்தவர் போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டதாகவும், அதன்மீதே போலீசார் தயாராக வந்து பிடித்துவிட்டதாகவும் தெரியவந்தது.

* * *

கப்பலில் ராமநாதபுரம் நகரசபைத் தலைவரும் பிரயாணம் செய்தார். அவருக்கு இலங்கையிலே பல வருஷ காலமாக வர்த்தகத தொடர்பு இருக்கிறதாம். கதர் உடை மிக 'சிம்பிளாக' அணிந்திருந்தார். பார்த்தால் நகரசபை சேர்மன் என்று சொல்ல முடியாது.

ராமநாதபுரத்தைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டேன். டக் டக் என்று பதில் சொன்னர். "ஐயா! ராமநாதபுரத்திலிருந்து இலங்கைக்கு கள்ளத் தோணிகள் அதிகம் வருவதாயும், அதனல் தொண்டமான் உட்பட எல்லா இலங்கை இந்தியரையும் 'கள்ளத்தோணி' என்று அழைக்கிருர்கள். தெருவில் தலை நிமிர்ந்து நடக்கவும் முடியவில்லை. இந்தக் 'கள்ளத் தோணிகள்' இங்கு வராமல் நீங்கள் ஏதும் தடுக்க முடியாதா?" என்று கேட்டேன்.

அவருக்கு இது 'சுருக்' என்று தைத்துவிட்டது போலும், "ராமநாதபுரத்தைச் சேர்ந்த யாரும் கள்ளத்தனமாக வருவதில்லை. மற்ற ஜில்லாக்களிலிருந்தே ராமநாதபுரம் வழியாக இலங்கைக்கு வருகிருர்கள். அதுவும் இலங்கையில் ஏற்கெனவே இருந்து பழக்கப்பட்டவர்கள் தான் வருகிருர்களேயன்றி புதிதாக யாருமில்லை. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல கைத்தொழில்களும் விவசாயமும் பெருகும். பிறகு கள்ளத்தோணிகள் இலங்கையிலிருந்துதான் இந்தியாவுக்கு வரும். பாக்கு வைத்து அழைத்தாலும் இந்தியாவிலிருந்து யாரும இலங்கைக்கு வரமாட்டார்கள்" என்று ரோசத்துடன் கூறினர்.

ராமநாதபுரம் ஜில்லாவில் இவ்வாண்டில் நல்ல மழை. குளங்குட்டைகள்.எல்லாம் தண்ணீர். எங்கும் பச்சை பசேலென்ற வயல்கள். இதற்கு முன் பொட்டல் காடாகக் கிடந்த இடமெல்லாம், பசும் வயல்களாகக் காட்சி அளிப்பதைப் பார்க்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. இப்படியே தப்பாமல் மழை பெய்தால், ராமநாதபுரத்திலிருந்து ஒரு காக்கைகூட இங்குவராது! ஆனல் மழை தப்பாமல் பெய்ய நாம் என்ன செய்யலாம்!

* * *

இந்தியாவின் தெற்கு வாசல் தனுஷ்கோடி. அங்கு ரயில் ஏறியதும், ஒரு தாய், கைக் குழந்தையுடன் வந்து, "அம்மா ஒரு கவளம் சோறு குடுங்களம்மா, இந்தக் குழந்தைக்கு. உங்களுக்கு கோடி புண்ணியமுண்டு" என்று ரயிலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணைக் கேட்டார். அப்பெண, 'கொஞ்சம் சோறு கொடுக்கலாமா?' என்று மனம் இளகி தன் கணவரின் அனுமதியைக் கோரினர்.

(8ம் பக்கம்பார்க்க)

## இலட்சுமித் தோட்ட விசாரணை

# "தொழிலாளரைக் கைதுசெய்யும் அதிகாரம் காவற்காரருக்கு கிடையாது"

### ஜி. ஜி. யின் கேள்விக்கு இன்ஸ்பெக்டர் பதில்

கொழும்பு, புதன்

**தோட்டத்திலுள்ள தொழிலாளர்களை தோட்டத்துரையின் உத்தரவுப்படி காவற்காரர்கள் கைதுசெய்வதற்குச் சட்டமெதுவும் இல்லையென்பதை இலட்சுமித்தோட்டத் துப்பாக்கிபிரயோக விசாரணையின்போது வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் இன்ஸ்பெக்டர் தலுவத்தை ஒப்புக்கொண்டார்.**

இலட்சுமித் தோட்டத் துப்பாக்கிப் பிரயோக விசாரணை நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பமானது.

1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் திகதி நாவலப்பிட்டிப் பொலிஸ் நிலயத்தை விட்டுச் சென்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி.பி. தலுவத்தை நேற்று முழுவதும் விசாரணை செய்யப்பட்டார்.

இ. தொ. காங்கிரஸ் சார்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திரு. தலுவத்தையை குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி: தோட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாகவும் அதில் காயமடைந்தவர்களின் பெயர்களையும் தெரிவித்து 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20-ந் திகதி சின்னையா என்பவர் பொலிசில் ஒரு வாக்கு மூலம் கொடுத்தார். அது சம்பந்தமாக பொலிசார் எதுவித நடவடிக்கையும் எடுத்தார்களா?

சாட்சி: எனக்கு ஞாபகமில்லை.

ஜி. ஜி: 1959 ஒக்டோபர் 21ந் திகதி தோட்டத் துரை இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதன் பிரதியொன்று பொலிசுக்கு அனுப்பப்பட்டது. இக் கடிதத்தில் கணக்கப்பிள்ளையின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தும் உத்தேசம்பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை அல்லது விசாரணை நடைபெற்றதா?

சாட்சி: எனக்கு ஞாபகமில்லை.

ஜி. ஜி: இச்சமயத்தில் திரு. ஹார்லி உமக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தனது காவற்காரர்களுக்கு இரண்டு துப்பாக்கிகளைத் தாம் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்?

சாட்சி: எனக்கு ஞாபகமில்லை.

ஜி. ஜி: (திரு. ஹார்லியின் கடிதத்தின் புகைப்படப் பிரதியொன்றைக் காட்டி) இது 'இன்ஸ்பெக்டர்' என்று உமக்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது!

சாட்சி: ஆம்!

ஜி. ஜி: பொலிசார் தலையிட வேண்டிய அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டதென்பதை நீர் உணர்ந்துகொள்ளவில்லையா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: தோட்டத்தில் ஒழுங்கையும் சட்டத்தையும் நிலைநாட்டுவதற்கு பலாத்காரம் உபயோகிக்க தோட்டத்துரை தமது கையில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டார். துப்பாக்கியை உபயோகிக்கத் தாம் தயாராக இருப்பதாக உமக்கு இதன் மூலம் அறிவித்ததாகாதா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இரண்டு தொழிலாளர்களை, காவற்காரர் சுட்டுவிட்டதாகத் தகவல் கிடைத்ததும் நீர் விசாரணை நடத்தச் சென்றீரா? நீர்தானே விசாரணைப்பகுதிக்குப் பொறுப்பு?

சாட்சி: ஆம். நான் தோட்டத்துக்குச் சென்றேன்.

ஜி. ஜி: இலட்சுமித் தோட்டத்துக்கு சார்ஜன்ட் பண்டா உதவி இன்ஸ்பெக்டர் பெரேராவுடன் சென்றது உமக்கு நினைவிருக்கிறதா!

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: கணக்கப்பிள்ளையின் வீட்டை சில தொழிலாளர்கள் தாக்கியதாக திரு. ஹார்வி உதவி இன்ஸ்பெக்டர் பெரேராவிடம் கூறினர். அவரே (ஹார்லி) இரண்டு துப்பாக்கிகள் வைத்திருந்தார்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: உதவி இன்ஸ்பெக்டர் பெரேரா கணக்கப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றபொழுது இரண்டு காவற்காரர்களும் அங்கு துப்பாக்கிகளுடனும் காட்ரிஜ்களுடனும் நின்றனர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: கருணாதிலகா உபயோகித்த காட்ரிஜ்கள் பற்றி குறிப்பெதுவும் இல்லை. ஆனல் உபயோகிக்கப்பட்ட, உபயோகிக்கப்படாத காட்ரிஜ்களை அர்னோலிஸ் கொடுத்தார்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: பின்னர் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்கள்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: கதவு, ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தனவென்று தகவல் தெரிவிக்கப்பட்டது. வீட்டுக்குள் கற்களோ தடிகளோ காணப்படவில்லையென்றும் உள்ளேயும் வெளியேயும் கண்ணாடித் துண்டுகள் தான் கிடந்தனவென்றும் அவரே சொல்கிருர். கற்களோ தடிகளோ காணப்படாததுதானே முக்கியமான விஷயம்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஆனல், உதவி இன்ஸ்பெக்டர் பெரேராவுடன் தான் சென்றபொழுது வீட்டுக்குள் கற்கள் கிடந்ததை தாம் உண்மையில் பார்த்ததாக நான்கு நாட்களுக்குப் பின் சார்ஜன்ட் பண்டா கூறினர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இந்த அம்சம் சம்பந்தமாக நீர் கவனித்ததையும் குறித்துக்கொண்டீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இரண்டு கதவுகளினதும் இரண்டு ஜன்னல்களினதும் கண்ணாடிகள் உடைந்ததாக நீர் குறித்திருந்தீர். வீட்டினுள் கற்கள் கிடந்ததை நீர் கவனிக்கவில்லை.

சாட்சி; ஆம்.

ஜி. ஜி: மூன்று நாட்களுக்குப் பின்னர்தான் வீட்டினுள் கற்கள் கிடந்ததை சார்ஜன்ட் பண்டா கவனித்தார். இவர் தான் கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்.

ஜி. ஜி: துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் நடந்தவைகளைப்பற்றி ஏராளமான வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. சேகு தாவூதின் மனைவி அமீனு உம்மாவும் ஒரு வாக்குமூலமளித்தார்.

சாட்சி: எனக்குத் தெரியாது.

ஜி. ஜி: இந்த வாக்கு மூலத்தில். சின்னையா வந்து ஒரு பொல்லால் கதவை அடித்ததைப் பார்த்ததாக அவர் (அமீனு உம்மா) குறிப்பிட்டிருந்தார். "நான் கல் எதுவும் வீசப்பட்டதைப் பார்க்கவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர். குற்றச்சாட்டு பற்றி நீர் விசாரணை செய்தீரா? அவர் மீது வழக்குத் தொடரப்பட்டதா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: ஒக்டோபர் 22ந் திகதி இரவு 9 மணியளவில் பலர் பொலிஸ் நிலயத்துக்கு வந்தனர். வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. சின்னையாவும் அவர்களில் ஒருவர். சில காவற்காரர்கள் கோடரிகளும், துப்பாக்கிகளும் கொண்டுவந்ததாகவும் அவர்களில் ஒருவர் துப்பாக்கியில் 'காட்ரிட்ஜைப்' போட்டுக் கொண்டு சுடப்போவதாகப் பயமுறுத்தியதாகவும் அவர் தமதுவாக்குமூலத்தில்கூறினர். இவர்கள் மறுநாட்காலை வரை தடுத்து வைக்கப்பட்டனர்.

ஜி. ஜி. (கமிஷனரைப் பார்த்து) 'மரத்தால விழுந்தவனை மாடேறி மிதிச்சதுமாதிரி' என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது ஐயா!

ஜி. ஜி. 25-ந் திகதி அமீனு உம்மா மீண்டும் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். வளவில் கூட்டத்தினர் நின்றதைப் பார்த்ததாகவும் வீட்டுக்கதவை சின்னையா நொருக்கியதைப் பார்த்ததாகவும் அமீனுஉம்மா அதிலும் தெரிவித்துள்ளார்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. கணக்கப்பிள்ளையின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் உதவிக்குமாஸ்தா பெர்னன்டோவிடமிருந்து பொலிசார் வாக்குமூலம் பதிவு செய்தார்களா?

சாட்சி: எனக்கு நினைவில்லை.

இச்சமயம் பொலிசார் பதிவு செய்த வாக்குமூலங்களைக் கொண்ட ஒரு தஸ்தாவேஜுவை சாட்சியிடம் திரு. ஜி.ஜி பொன்னம்பலம் கொடுத்தார். அதைப் படித்த சாட்சி அதைச் சரியென ஒப்புக்கொண்டார்.)

ஜி. ஜி.: கணக்கப்பிள்ளை வீட்டுக் கதவை நோக்கி ஒருவர் தடியை ஓங்கியதைத்தான் பார்த்ததாக குமாஸ்தா பெர்னன்டோ தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்: இதற்குச் சிறிது நேரம் கழித்து கணக்கப்பிள்ளையின் மனைவி வீட்டின் பின்புறக்கதவின் வழியாக தனது வீட்டுக்குவந்ததாகவும் அதன்பின் பத்து நிமிஷம் கழித்து கங்காணி வீட்டுத் திசையிலிருந்து இரண்டு துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டதாகவும் குமாஸ்தா பெர்னன்டோ தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. மாண்டவர்களின் மரணம்பற்றி விசாரணை நடைபெறவில்லை. ஆனல் மரண விசாரணை நடைபெற்றது. இது தவறென்பதை நீர் ஒப்புக்கொள்கிறீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. இரண்டு காவற்காரர்களும் விடுதலை செய்யப்பட்டபின், பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் தான் காயமடைந்தவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. காவற்காரர் சம்பந்தமாக அவர்கள் தெரிவித்தவை உண்மையா இல்லையா என்பதை பரிசோதனை செய்ய ஏதாவது முயற்சி செய்யப்பட்டதா?

சாட்சி: இல்லை

ஜி. ஜி. சந்தேகப் பேர்வழிகள் சொன்னவைகள் பற்றி நீர் கவலைப்படவில்லை?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: மறுநாள் மாஜிஸ்டிரேட் நடத்திய விசாரணையின் போது, கணக்கப்பிள்ளையின் வளவில் செல்லையா சுடப்படவில்லையென்றும் கங்காணியின் வீட்டுக்குச் சமீபத்தில் தான் சுடப்பட்டாரென்றும் தெரியவந்ததல்லவா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. செல்லையாவும் மற்றவர்களும் காயமடைந்துவிழ்ந்த இடம் பொலிசாரினல் கவனத்துக்கெடுக்கப் படவில்லை. மாஜிஸ்டிரேட்டிடம்சுட்டிக்காட்டப் படவுமில்லை?

சாட்சி: ஆம். எனக்கு நினைவுள்ளவரை.

ஜி. ஜி. காவற்காரர்களால் மூவர் கைது செய்யப்பட்டதுதான் இத்துப்பாக்கிப்பிரயோகம் நடைபெறவேண்டிய முக்கிய காரணமென்பது உமக்குத் தெரியுமா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. தோட்டத்துரையின் உத்தரவின் மீது தோட்டத்திலுள்ள தொழிலாளர்களைக் கைது செய்வதற்கு தோட்டக் காவற்காரர்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டமெதுவுமில்லையே?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இது சம்பந்தமாக பொலிசார் ஏதாவது செய்தார்களா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: மூவரையும் பொலிஸ் பாதுகாப்பில் எடுத்துச் செல்லுமாறு தோட்டத்துரை பொலிசுக்கு டெலிபோனில் கூறினரா?

சாட்சி: எனக்குத் தெரிந்தவரையில் இல்லை ஐயா.

ஜி. ஜி: காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்வதற்கு காவற்காரர் தடை செய்வதாக தொழிலாளர்கள் பொலிசில் வாக்குமூலம் கொடுத்திருந்தனர். இதுசம்பந்தமாக பொலிஸ் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா?

சாட்சி: எனக்கு ஞாபகமில்லை.

ஜி. ஜி: தோட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த எவருக்கும் தீங்கிழைக்கும் நோக்கமாக தொழிலாளர்களை அண்ணமலை அல்லது அருணசலம் தூண்டிவிடுவதாக எவ்வித புகாரையும், இங்கு இந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டதைத் தவிர நீர் கேள்விப்படவில்லை?

சாட்சி: இல்லை; அப்படி ஒரு புகாரையும் நான் கேள்விப்பட்டதில்லை.

ஜி. ஜி: மேலதிக பொலிஸ் வேண்டுமென்று சார்ஜன்ட் பண்டா கோரியதற்கு நாவலப்பிட்டி பொலிஸ் நிலயத்தின் பதிவுஏதாவது உண்டா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: பொலிஸ் துப்பாக்கிப பிரயோகம் நடைபெற்ற இடத்துக்கு நீர் சென்றபொழுது பொலிஸ்காரர்கள் துப்பாக்கிகளை மலைச் சரிவை நோக்கி உயர்த்தியபடி நின்றதையும், சார்ஜன்ட் பண்டா குறிப்பு எடுத்துக்கொண்டிருந்தையும் நீர் பார்த்தீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சார்ஜன் பண்டாவோ வேறெவருமோ, யாரும் அடிக்கப் பட்டதாக உம்மிடம் சொல்லவில்லையா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: யாரும் இறந்து கிடந்ததை நீர் பார்க்கவில்லையா!

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: கூட்டத்தினரைப் பலாத்காரச் செயலுக்குத் தூண்டிவிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் உத்தரவிட்டாரா!

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: காரணம் ஏதும் கூறினரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. பத்து காட்ரிஜ்கள் கொண்ட 'மகஸீனை' எப்படித் தொலைத்தாரென்று கான்ஸ்டபிள் டயஸிடம் கேட்டீரா?

சாட்சி: விசாரணையெதுவும் நடைபெறவில்லை. தொலைந்தது பற்றி அறிவிக்கப்பட்டது.

ஜி. ஜி: மின்சார நிலயத்தின் நான்கு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்ததுதான் திரு. ஹார்லி உமக்குக் காட்டிய சேதங்கள். அதுவும் நீர் பங்களாவுக்குச் சென்றபொழுதுதான் காட்டப்பட்டது.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: நீர் தோட்டத் துரையின பங்களாவிலிருந்து திரும்பி வந்தபின்னர் தான் தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இடத்தை சார்ஜன்ட் பண்டா உமக்குக் காட்டினர்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஆராயியைச் சுடுவதற்கு ரோட்டிலிருந்து பொலிசார் குறிபார்த்திருக்கிருர்களென்று நீர்கூறுகிறீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ரோட்டில் நின்றுல் நடேசனும். மாரியப்பனும் வீழ்ந்த இடத்தை நீர் பார்க்க முடியுமா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இது சம்பந்தமாக பரிசோதனையெதுவும் நடத்தவில்லையென்று திரு. பார் குமாரகுலசிங்கத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினீரா?

சாட்சி: இல்லை ஐயா.

---

## பரந்தன் தொழிற் சாலை

### வெளிநாட்டு நிபுணர் பாராட்டு

பரந்தன், புதன்

"வட அமெரிக்காவில் நான் பார்த்த இதேயளவான தொழிற்சாலைகளிலும் இத் தொழிற்சாலை இயக்குநர்கள் தொழில்நுட்பத் திறமையிலும் மதிநுட்பத்திலும் முயற்சியிலும் சிறந்தவர்களாக இருக்கிருர்கள்." இவ்வாறு அகில உலக இன்ஜினியர்கள் ஆலோசகரும், கனடா நிபுணருமான திரு. ஜோர்ஜ் ஜேகிரேனி பரந்தன் தொழிற்சாலை பொழுதுபோக்குச் சங்கத்தில் உரை நிகழ்த்தும்போது கூறினர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அபிவிருத்தி பற்றிச் சுயேச்சையான ஆலோசனையைச் சொல்ல இலங்கை அரசாங்கத்தால் அழைக்கப்பட்ட திரு. கிரேனி தொழிற்சாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும்போது தொழிற்சாலையில் நிலவும் கூட்டுமனப்பான்மையையும் ஒற்றுமையையும் பாராட்டியதோடு இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையினை அடிப்படையாகக் கொண்டிருக்கிற தென்றும் இதன் எதிர்காலம்பற்றி தனக்கு நல்ல நம்பிக்கை இருப்பதாகவும் கூறினர்.

---

## ஆசிரியத் தொழிலுக்கே தகுதியற்றவர்கள்

கண்டி, புதன்

"ஆசிரியர் பதவி கோரி விண்ணப்பித்த அத்தனை பேருக்கும் ஆசிரியப் பதவி கிடைத்திருக்கிறது. இவர்களுள், 50 சதவிகிதத்தினர் ஆசிரியத் தொழிலுக்கே தகுதியற்றவர்கள்" என்று கண்டி வித்தியார்த்த கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் முன்னள் உள்நாட்டு கலாச்சார மந்திரி திரு. எம். பி. டபிள்யு. மிடிலகா பேசுகையிற் குறிப்பிட்டார்.

'ஆசிரியத் தொழிலில் நான் சுமார் 42 வருட காலம் அனுபவம் பெற்றுள்ளேன். ஆசிரியர்கள், நல்ல நேர்மையுள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும். இவர்கள் இப் பழக்கங்களை மதகுருமாரிடமிருந்துதான் எதிர்பார்க்கலாம்" என்றும் அவர் தெரிவித்தார்.

## செனட்டர் பதவி

### சமசமாஜ வாலிபர் கழகம் தீர்மானம்

நெல்லியடி, வியா.

"சோஷலிச பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இன்றைய அரசாங்கம் சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மைத் தமிழர் என்ற பாகுபாடு காட்டிச் செனட்சபையில் நியமனப் பிரதிநிதித்துவம் அளிப்பது கண்டிக்கத்தக்கதாகும். அதே நேரத்தில் அரசியற் கட்சிகள் தம் கட்சி சார்பில் சிறுபான்மைத் தமிழராயினும் சரி பெரும்பான்மைத் தமிழராயிருந்தாலும் சரி ஒருவரைச் செனட்சபைக்குச் சிபார்சு செய்வதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்."

மேற்கண்ட தீர்மானம் வதிரி சமசமாஜ வாலிபர் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்தின் நகல்களை அரசாங்கத்துக்கும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

## பிரிவுபசாரம்

காத்தான்குடி, செவ்வாய்

கல்லடி உப்போடை கிராமச் சங்கத்தில் மின்சார விநியோக மேர்ப்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு. எம். எஸ். விஜயசூரியா பசறைக்கு மாறிச் செல்லுகிறார். இவரது சேவையைப் பாராட்டு முகமாக கிராமச்சங்க ஊழியர்கள் திரு. கே. கனகலிங்கம் தலைமையில் பிரிவுபசாரமளித்தனர்.

பலர் திரு. விஜயசூரியாவின் சேவையைப் பாராட்டிப்பேசிய பின் திரு. விஜயசூரியா நன்றி தெரிவித்துப் பேசும் போது தொழிலாளர்கள் தம் சேவையை நாட்டுக்கு நல்லபடி செய்ய அவர்களிடையே ஒற்றுமையும், கட்டுப்பாடும் வேண்டுமென்றார்.

# 3 லட்சம் தொன் சிமெந்து உற்பத்தியாகும்

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையின் இலக்கு

### கார்ப்பரேஷன் தலைவர் விளக்கம்

மாவிட்டபுரம், புதன்

"காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்தித் திட்ட வேலைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனுல் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை தனது தற்போதைய உற்பத்தியிலும் பார்க்க சுமார் மூன்றரை மடங்கு அதிகப்படியான சிமெந்தை உற்பத்தி செய்யலாம். தற்பொழுது காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் ஒவ்வொரு வருடமும் சராசரி 80,000 தொன் சிமெந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனுல் இத் தொழிற்சாலையின் அபிவிருத்தித் திட்டத்தின்படி சிமெந்து உற்பத்தி 300,000 தொன்னுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ் விஸ்தரிப்பு இயக்கம் 1963ம் ஆண்டு முடிவடையும். இதன் பின்னரே இத் தொழிற்சாலையின் உற்பத்தியும் அதிகரிக்கும்".

இலங்கை சிமெந்து காப்பரேஷனின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜி. வி. பி. சமரசிங்கா உத்தியோக தோரணையில் முதல் தடவையாக காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைக்கு கடந்த திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் விஜயம் செய்த போது மேற்கண்டவாறு தெரிவித்தார். காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்தித் திட்டம் பற்றியும், காங்கேசன் துறைத் துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படுவதுபற்றியும் நமது நிருபர் திரு. சமரசிங்காவைப் பேட்டி கண்ட போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:- "காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காங்கேசன் துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதும் ஓர் முக்கிய அம்சமாகும். நிதி மந்திரி அண்மையில் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பொழுது காங்கேசன் துறைத் துறைமுக அபிவிருத்தி வேலைகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தற்பொழுது தீர்மானித்துள்ளது. இத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின்படி சுமார் 15 கோடி ரூபாய் செலவிடப்படும். துறைமுக கமிஷனும், இலங்கை சிமெந்து காப்பரேஷனும் துறைமுக அபிவிருத்தி வேலையை மேற்கொள்ளும்.

### 3 லட்சம் தொன் சிமெந்து உற்பத்தி

தற்பொழுது உள்ள சூளையுடன் இரண்டாவது சூளையும் அமைக்கப்பட்டவுடன் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை வருடாவருடம் சராசரி 300,000 தொன் சிமெந்தை உற்பத்தி செய்யும். இத் தொகையில் 100,000 தொன் கிளிங்கராக காலியில் நிறுவப்படவிருக்கும் சிமெந்துத் தொழிற்சாலைக்கு கப்பல் மூலமாக அனுப்பப்படும்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் விஸ்தரிப்புத் திட்டத்தின்படி 40 கோடி ரூபாய் செலவிடப்படும் இத் தொகையில் சுமார் 20 கோடி ரூபாய் வெளிநாடுகளிலிருந்து இத் தொழிற்சாலையின் விஸ்தரிப்புத் திட்டத்துக்கென இறக்குமதி செய்யப்படவிருக்கும் இயந்திர சாதனங்களும், மற்றும் உபகரணங்களுக்கும் செலவிடப்படும். காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் விஸ்தரிப்புத் திட்டத்துக்கும், காலியில் ஓர் சிமெந்துத் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் வேண்டிய பண வசதிகளை கடனாக தந்து உதவுவதற்கு மேற்கு ஜெர்மனியிலுள்ள ஓர் நிதி காப்பரேஷன் முன் வந்துள்ளது இது விஷயமாக எமது அரசாங்கம் இக் காப்பரேஷனுடன் ஓர் உடன்படிக்கைக்கு வந்துள்ளது. இக் காப்பரேஷனிடமிருந்து எமது அரசாங்கம் சுமார் 38 கோடி ரூபாவை எதிர்பார்க்கிறது. இத்தொகையுடன் சிமெந்துத் தொழிற்சாலையிலுள்ள இருப்புப்பணமாகிய 20 கோடி ரூபாவையும் சேர்த்தே காங்கேசன்துறைத் துறைமுக விஸ்தரிப்புத் திட்டமும், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புத் திட்டமும் அமுல் நடத்தப்படும்.

## "எழுத்தாளர் ஒற்றுமை"

மானிப்பாய், புதன்

"இலக்கியத்தில் நுனிப் புல் மேய்பவர்களும், விமர்சனப் போர்வையில் சுயநல விளம்பரங்கள் வரைபவர்களும் கன்டனக் குரல் கொடுத்து இளம் எழுத்தாளர்களின் ஆர்வத்தைக் கிள்ளியெறிபவர்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், எழுத்துத் துறைக்கும் கேடு விளைவிப்பவர்களாவர். நமது இலக்கியம் வளர ஒழுக்கமும் பண்பும் சகிப்புத்தன்மையும் மிக்க ஆக்க இலக்கியவாதிகளே தேவைப்படுகின்றனர். ஈழமெங்கும் பரவியிருக்கும் பேனுமன்னர்களிடையே இந்த அடிப்படையிலெழுந்த ஒற்றுமையுணர்ச்சி வலுவடைய வேண்டும்" என்று யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னை நாள் செயலாளர் திரு நாவேந்தன் மானிப்பாய் தமிழ் மன்றத்தினரால் தமக்களிக்கப்பட்ட பாராட்டுபசாரமொன்றிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களில் இலக்கிய நண்பர்கள் சந்திப்புக்காகச் செல்லும் திரு. நாவேந்தனுக்கும் மற்றும் சில இலக்கிய நண்பர்களுக்கும் பாராட்டுபசாரமளிக்கு முகமாக நடைபெற்ற இவ்வைபவத்திற்கு ஆசிரியர் திரு. எஸ். கைலாயபிள்ளை தலைமை வகித்தார்.

'சமூகத் தொண்டன்' துணை ஆசிரியர் திரு கே. ஆனந்தன் உட்பட மற்றும் பலரும் பேசிய பின்னர் தேநீர் விருந்துபசாரமொன்றும் நடைபெற்றது.

## இலக்கியப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில்கவிதை, சிறுகதை என்பன ஆக்குவதிலும் அவற்றைச் சிருஷ்டிப்பதற்கான இலக்கிய ஓவியங்களை வரைவதிலும் போட்டிகள் நடாத்த யாழ்ப்பாணம் தமிழ் இலக்கிய மன்றம் முடிவு செய்துள்ளது. பரிசும் பாராட்டும் பெற்ற ஓவியங்கள் புத்தக வடிவில் வெளியிடப்படும்.

# உண்மைத் தலைவர்கள் ஆசிரியர்கள்; அரசியல்வாதிகளல்ல

### மூதூர் எம். பி. கருத்து

திருக்கோணமலை, புதன்

"மொழியிலும் பார்க்க முஸ்லிம்களுக்கு மதம்தான் மிக முக்கியம். நாட்டின் எந்தப் பகுதியில் அவர்கள் வாழ்ந்தாலும், எந்தமொழியைப் பேசினுலும், முஸ்லிம்கள் ஒரே இனமாகத்தான் கணிக்கப்படுகின்ருர்கள்."

அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற, திருக்கோணமலை மாவட்ட இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் மூதூர் எம். பி. ஜனுப் எல் ஏ. மஜீத் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

முஸ்லிம் சமுதாயத்தை முன்னேற்றுவதில் முஸ்லிம் ஆசிரியர்கள் பெரும் சேவை செய்யக் கடமைப் பட்டுள்ளனர். விஞ்ஞானக் கல்வித்துறையில் முஸ்லிம்கள் பின் தங்கியுள்ளனர். தங்களது குழந்தைகளை இத்துறையில் முன்னேற்றுவதற்கு பெற்ருேர், அதிக கவனம் செலுத்தவேண்டும். இந்தக் குறை ஏற்படுவதற்கு காரணம், முஸ்லிம்கள் மத்தியில் படித்த பெண்கள் குறைவாக இருப்பதே. முஸ்லிம் சமுதாயத்திடையே, ஒற்றுமை வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் ஆசிரியர்கள் முயற்சி செய்யவேண்டும். அரசியல்வாதிகள் தற்காலிகத் தலைவர்கள். ஆனுல், ஒரு நாட்டின் உண்மைத் தலைவர்கள் ஆசிரியர்களே.

## நாடக கலா மன்ற நிர்வாகிகள்

நெல்லியடி, வியாழன்

வதிரி நாடக கலாமன்றத்தின் புது வருட உத்தியோகத்தர் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு திரு. எஸ்.கே.சரவணமுத்து தலைமை வகித்தார்.

தலைவராக திரு. எஸ். கே. சரவணமுத்துவும், உப தலைவராக திரு. எம். இராசாவும், இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் வி. என். செந்திநாதன், எஸ். கே. இராசேந்திரன் ஆகியோரும், தனதிகாரியாக திரு. எம். தங்கவேலுவும் நாடக ஆசிரியர்களாக திருவாளர்கள் கே. என். சண்முகநாதன், எம். பி. அன்னசாமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.


# கட்டிட சாமான்கள்

கை மார்க் சீமெந்தி
அசானே ,,
டால்மியா ,,
எச் அயண், ஆங்கிலயண்
பிளாட்டயண், ட அயண்
கல்வனேஸ் கூரைத் தகடுகள்
அலுமினியம் ,, ,,
அஸ்பெஸ்டாஸ் ,, ,,
ராணி மார்க் கூரை ஓடுகள்
மஹாராணி மார்க் ,, ,,
இரும்புத் தகடுகள்
கல்வனைஸ் பைப்

மிகவும் சகாயமான விலைகளில் கிடைக்குமிடம்

## செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!

## "லேடன்" தயாரிப்பு

Leyden L. I. L.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.

### இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்.

தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

## இலங்கையின் ஜவுளி இறக்குமதி குறைந்துள்ளது

சென்னை, ஆக. 8

இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஜவுளியின் அளவு சமீபத்தில் பாரதூரமாகக் குறைந்திருப்பது பற்றி இங்குள்ள வர்த்தக வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. வழக்கமாக 2 கோடி யார் ஜவுளி ஏற்றுமதியாகுமென்றும், இப்போது அது 50 லட்சமாகக் குறைந்திருப்பதாயும் அவ்வட்டாரங்கள் அறிவித்தன. இலங்கை தனது உள்நாட்டு ஜவுளி உற்பத்தியை அபிவிருத்தி செய்ய ஆர்வம் கொண்டிருப்பதே இதற்குக் காரணம் என அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்ணைக் கவருதடி பாப்பா
விண்ணை விளக்குதடி பாப்பா
மீன்போல் மினுங்குதடி பாப்பா
பொன்மார்க் அலுமினியம் பாப்பா.

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

டொலர்
பவுன் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

இலங்கை எங்கும் கிடைக்கும்
அலுமினியம் இன்டஸ்ரீஸ்
லிமிட்டெட்,
மாவிட்டபுரம் :: யாழ்ப்பாணம்.
JDI

## அரசாங்க அதிபரையும் பொலிஸையும் ஏமாற்றினர்

மன்னர், செவ்வாய்

மன்னர் பொலிசைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் செனிவரத்ன என்பவரின் கைக்கடிகாரத்தை ஜூலை மாதம் 7-ம் திகதி பெற்றுக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்ததாக ஜோசேப்பு மைக்கேல் விக்டர் காஸ்பர் என்பவரும் கணபதிப்பிள்ளை என்பவருமாகிய யோசேப்பு குறூஸ் என்பவர் மன்னர் உதவி நீதிபதி திரு. எஸ் சின்னத்தம்பி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஐ.ஆர்.ஸி என அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நபர் ஏழுகுற்றங்களைச்செய்துள்ளார் எனத் தெரிகிறது. இவர் தாம் கொலைசெய்யப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் குறூஸ் என்பவரின் மகன் எனக்கூறி கைக்கடிகாரத்தை கொழும்புக்கெடுத்துச்சென்று திருத்தித்தருவதாக வாக்குறுதியளித்து பொலிஸ்கான்ஸ்டபிள் செனிவரத்னவிடமிருந்து கைக்கடிகாரத்தை பெற்றார்.

மன்னா அரசாங்க அதிபரிடம் பொய்கூறி ரயில்வே வாறன்ட் ஒன்றும் பெற்றுள்ளார் என இவர்மீதுகுற்றம் சுமத்தப்படடுள்ளது.

எதிரி இரத்தினபுரியின் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இவரை ஆகஸ்ட் 18-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

### தலைசிறந்த நாடக நடிகர் காலமனர்

பீகிங், ஆக. 8

சீனவின் தலைசிறந்த நாடக நடிகரான மேலாங்காங் தனது 67வது வயதில் இன்றுகாலமனர்.

## 'எம் பி.க்கள், மந்திரிகள் சம்பளத்தைக் குறைக்கவும்'

### பதுளை நகரசபை யோசனை

பதுளை, புதன்

வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டுமென்றும், ஐக்கிய பண்டகசாலைகளையும் தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களையும் தனித்தியங்க அனுமதி அளிக்கப்படவேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் பதுளை அர்பன்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பார்லிமெண்ட் எம். பி. க்களின் சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதியைக் குறைக்கும்படியும் மந்திரிகளின் சம்பளத்தில் அரைப்பங்கைக் குறைக்கும்படியும், கவர்னர் ஜெனரலின் சம்பளத்தைக் குறைக்கும்படியும் எம். பிக்களும் மந்திரிகளும் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் செல்வதை நிறுத்தும்படியும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் சபையில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தை ஆதரித்து எஸ். எல். எவ். பி. அங்கத்தவர்களும் வாக்களித்தனர்.

---

### இந்துக்கள் எதிர்ப்பு

#### சலவைக்கு தீர்த்தக்குளம்

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி சிவன்கோவிலுக்கு முன்னல் உள்ள தீர்த்தக்குளத்தை சலவை செய்பவர்களுக்கு தொட்டிகளும் கிணறுகளும் கட்டிக் கொடுப்பதென்ற நல்லூர் கிராமச் சங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து அப்பகுதியிலுள்ள முக்கிய இந்துக்கள் பலர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு ஒரு மகஜரை அனுப்பியுள்ளனர்.

"தீர்த்தக்குளமாகப் படிக்கட்டுகள் கட்டி தீர்த்தமாடுவதற்கு என நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகையில் சிலர் குளத்தை அசுசிப்படுத்தக் கூடியவகையில் நடந்துகொண்டதனல் சென்றுண்டு தீர்த்த உற்சவம் ஒத்திப்போடப்பட்டது. எனவே இந்துக்களின் புனிதமான இக்கைங்கரியத்துக்கு உதவியளிக்க வேண்டுகிறோம்." இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தீர்மானத்தை வாபஸ் பெறுமாறும் நல்லூர் கிராமச் சங்கத்தை இவர்கள் கேட்டிருக்கிறர்கள்.

---

### வங்கியில் பணமில்லாமல் ரூ. 1400 க்கு செக் கொடுத்தாராம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வங்கியில் பணமில்லாமல் ரூ. 1400 பெறுமதியான செக் கொன்றை தமக்கு கொடுத்து ஏமாற்றியதாக கல்முனை மெயின் வீதியைச் சேர்ந்த எம். ஐ. எம். இப்ரஹீம் மீது என். சாம்பசிவம் கம்பெனியினல் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எம். ஐ. எம். இப்ரஹீம் கைக்கடிகாரங்களும், சுவர்க்கடிகாரங்களும், வேறு பல பொருள்களும் வாங்கிய பின்னர், ரூ 1400 பெறுமதியான 'செக்'கொன்றை தங்களுக்குக் கொடுத்துச் சென்ருரென்றும் இந்தச் 'செக்' வங்கியில் மாற்றுவதற்கு எடுத்துச்செல்லப்பட்டபோது வங்கியில் பணமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவித்து சாம்பசிவம் கம்பெனியார் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

எம். ஐ. எம். இப்ரஹீம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜரானர். மாஜிஸ்திரேட் அவரை ரூ. 100 பிணையில் செலலுமாறு உத்தரவிட்டார். வழக்கு ஆகஸ்ட் 21ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 10-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 கோட்டுவார்த்தியம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இரு வயலின்.

இரவு 7-00 பேராசிரியர் கே. குலரத்தினம்--பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'வாழ்க்கைத் திரை'—தொடர் நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 வாத்தியக்கோஷ்டி, 9-30 தேர்ந்த இசை, 10-00 தமிழோசை (பி.பி.ஸி. அஞ்சல்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்கள் இசை 6-50 துதிப்பாடல்கள், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பட்டுக்கோட்டை ஏ. பாலசுப்பிரமணியம்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பட்டுக்கோட்டை ஏ. பாலசுப்பிரமணியம்-பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2 10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15, கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 ராகம், தானம், பல்லவி சென்னை அஞ்சல், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 முத்துத்தாண்டவர் பாடல்கள், 9-30 அகிலபாரத நாடக நிகழ்ச்சி.

---

### ரூ. 45 ஆயிரம் செலவில் விஞ்ஞான ஆய்வு கூடம்

கொழும்பு, செவ்வாய்

1961—62 நிதி வருடத்தில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் பள்ளிக் கூடங்களிற் கட்டுவதற்காக அரசாங்கம் 15 லட்சத்து 30 அயிரம் ரூபாயை ஒதுக்கி வைத்திருக்கிறது.

ஒவ்வொரு ஆய்வு கூடமும் கட்ட 45 ஆயிரம் ரூபாய் செலவாகும். பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிப்பதற்காகவே இப்படிப் பெருமளவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படுகின்றன.

விஞ்ஞான ஆய்வுக் கூடம் ஒன்றுகூட இல்லாத 14 தேர்தல் தொகுதிகளும் கல்வி அமைச்சு தயாரிக்கும் பட்டியலில் இடம் பெறுகின்றன. 1958-59 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டப்படி விஞ்ஞான ஆய்வு கூடம் கட்டப்பட்ட மதவாச்சி சிரேஷ்ட பாடசாலையும் தவறுதலாக இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

### சந்திப்புகள்

புதுடில்லி, ஆக. 8

இன்று காலை அமெரிக்க உதவி வெளிநாட்டுமந்திரி திரு. செஸ்டர் பௌல்ஸ், பிரதமர் நேருவை சந்தித்துப் பேசினர்.

பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

பட்டு நூல்

யானை பீடி

★ குணம் மணம் நிறைந்தது யானை பீடி ஒன்றே!

★ இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும் தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டதும் யானை பீடி ஒன்றே!

★ எல்லோரும் விரும்பிப் புகைப்பதும் எங்கும் சுலபமாகக் கிடைக்கக் கூடியதும் யானை பீடி ஒன்றே!

★ உள்நாட்டுக் கைத் தொழிலுக்கு ஊக்கமும் ஆதரவும் அளியுங்கள்!




தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்

யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, — கொழும்பு.
போன்: 7651.

மகத்தான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு 4 காட்சிகள்

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்
மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்

ஹோஸ்ட் றைடேஸ் ஒவ் த வெஸ்ட்
(ஆங்கில சீரியல் படம்)
பயங்கர சண்டைகள் நிறைந்த அற்புத படம்

தினசரி மாலை 4 மணிக்கு
ஹோல் இன் த ஹெட்
(HOLE IN THE HEAD)
(ENGLISH)

3-வது வாரம்
ராணி சினிமா (யாழ்ப்பாணம்) பி. ப. 2 மணி, மாலை 6-00 மணி 9-45 மணிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி
நடித்த
திருடாதே!

இப்பத்திரிகை [illegible] தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'பஸ் நிலையத்தை மாற்றவேண்டாம்'

## மந்திரிக்கு யாழ்ப்பாண எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணத்தில் இப்பொழுதுள்ள பஸ் நிலையத்தை முன்னர் இருந்த இடத்துக்கு மாற்றும் திட்டத்தை எதிர்த்துத் தமக்கு பொதுமக்களிடமிருந்தும், பிரயாணிகளிடமிருந்தும் வர்த்தகர்களிடமிருந்தும் புகார் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, தொழில் தேசிய மயசேவை மந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

புதிய பஸ் நிலையத்தை மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றுவது பற்றி பொதுமக்களிடையே அதிருப்தி நிலவுகிறது. இது விஷயத்தில் யாழ்ப்பாண மாநகரசபையிலும் கருத்து வேறுபாடு இருந்துவருகிறது.

நானும் இந்த இடமாற்றத்தை வன்மையாக ஆட்சேபிக்கின்றேன். இந்த யோசனை வீண் பணநஷ்டத்தைக்கொடுப்பதோடு பொதுமக்களுக்குப் பெரிய இடைஞ்சலையும் அளிக்கும், பொதுமக்களும், இ. போ. சவும், பொலிஸும் முன்னர் இருந்த பஸ்நிலையம் மிகவும் வசதிக்குறைவானதெனப் புகார் செய்ததன் பேரிலேயே புதிய இடத்தில் பஸ்நிலையத்தைத் திறக்க முன்னர் இருந்த நகரசபை நடவடிக்கை எடுத்தது. இதனால் நகரசபைக்கு ரூ. 80,000 செலவாகியது.

இப்புதிய பஸ்நிலையம் இ. போ. ச. வினால் அங்கீகரிக்கப்பட்டது. அவர்கள் ஒரு புதிய பஸ் ஸ்டேஷனை நிறுவத் தீர்மானித்துள்ளனர். இதற்கான மாதிரிப் படத்தை நகரசபையிடம் சமர்ப்பித்துள்ளனர்.

எனவே பொதுமக்கள் சார்பில் இப்புதிய யோசனையை நான் வன்மையாக எதிர்க்கின்றேன். பஸ் நிலையத்தை எந்த இடத்துக்கும் மாற்றவேண்டியதில்லை, ஆனால் பஸ் ஸ்டேஷனை கட்டுவதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## நொச்சிக்காட்டு பிள்ளையார் கோவில்

வட்டுக்கோட்டை, புதன்
வட்டுக்கோட்டை நொச்சிக்காட்டுப் பிள்ளையார் கோவில் வருடாந்தக் கூட்டம் கடந்த இரு மாதங்களில் இரண்டு தடவை கூட்டப்பட்டிருந்த போதும் 'கோரம்' இல்லாத காரணத்தால் பஞ்சாயத்தார் தெரிவும் மற்றைய நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லையெனத் தெரிகிறது.

இதனால் முன்னைய நிர்வாகக் குழுவே தொடர்ந்து இயங்குமெனத் தெரிகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'அவள் கிடக்கிறாள் சோம்பேறி. போய் வேலை செய்தால் என்ன கேடு' என்று அதே 'தர்மப்பிரபு' ஏதேதோ திட்டிவிட்டு, ஒரு நயாபைசாவை எடுத்து எரிச்சலுடன் வீசினார் ரயிலுக்கு வெளியே!

இந்தக் காட்சியைக் கண்டதும் 'அட இதுதானா பாரத புண்ணிய பூமி! அட கடவுளே! என்று வெட்கமும் துக்கமும் அடைந்தேன். என் பக்கத்தில் ஒரு சிங்களவர் இருந்தார். இதை எல்லாம் பார்த்து அவர் இந்தியாவெல்லாம் பிச்சைக்கார நாடென்றும், கஞ்சன்களே வசிப்பதாகவும் நினைத்திருப்பார். இந்தியா எளிய மக்கள் அதிகமுள்ள நாடுதான். என்றாலும், பாரத நாட்டில் தெற்கு வாசலில் இந்த கண்றாவிக் காட்சிகள் இல்லாமல் தடுக்க முடியாதா? அங்கு காணும் இவ்வித காட்சிகள் இந்தியாவுக்கே பெரிய அவமானமாகும்.

## பீங்கான் தொழிற்சாலை சுகாதார சேவைப் பொருள்களையும் தயாரிக்கும்

நீர்கொழும்பு, செவ்வாய்
நீர்கொழும்பில் ரூ. 2,675,000 செலவில் ஆரம்பிக்க விருக்கும் பீங்கான் தொழிற்சாலை, இப்போதுள்ள தொழிற்சாலையுடன் சேர்ந்தது. பீங்கான் பொருள்களைத் தயாரிப்பதில் பெரிதும் உதவியாக இருக்குமென பீங்கான் கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த தொழிற்சாலை சுகாதார சேவைக்குத் தேவையான பொருள்களையும் தயாரிப்பதுடன் சுவரில் பதிக்கும் வண்ண ஓடுகள் முதலியவற்றையும தயாரிக்குமெனத் தெரிகிறது.

## நாவாந்துறையில் சுட்டுக் கொலை

கொழும்பு, புதன்
யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை என்னும் இடத்தில் லாரென்ஸ் பர்னண்டோ என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டாரென்றும், இது சம்பந்தமாக ஆசீர்வாதம் செல்லத்தம்பி என்பவரை பொலிஸார் தேடிவருவதாயும் லாரென்ஸ் பெர்னண்டோ துப்பாக்கியுடன் தலைமறைவாய் இருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## புனிதச் சின்னம் இன்று சீனா செல்லுகிறது

கொழும்பு, புதன்
சீனப் புனித சின்னம் நாளை பிற்பகல் ரத்மலானையிலிருந்து விமானமார்க்கமாக சீனவுக்கு எடுத்துச் செல்லப்படும். அதற்கு முன் பிரதமர் இறுதிப் பூசை நடத்துவார். சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா தலைமையில் செல்லும் அரசாங்கத் தூதுக்கோஷ்டியும் இதே விமானத்தில் சீனா செல்லும்.

## சிங்கள நாடகங்கள்!

கொழும்பு, புதன்
தேசியநாடக மன்றத்தின் சார்பில் கண்டியில் சிங்கள நாடகங்கள் ஆரமபமாகவிருக்கிறது.

# டூனிஸிய பிரதிநிதி

## நேருவை சந்தித்தார்

புதுடில்லி, ஆக. 9
இந்தியா வந்துள்ள டூனிஸியஅதிபர் ஜெனரல் போர்கிபாவின் விசேஷ பிரதிநிதி இன்று பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினார். பிஸர்ட்டா பிரச்சினை சம்பந்தமாகவும் அங்கு நடைபெறும் சம்பவங்கள்பற்றியும் அவர் நேருவிடம் தெரிவித்தார்.

டூனிஸியாவுக்கு நேரு தமது ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டதாக அந்த விசேஷ பிரதிநிதி கூறினார்.

பிஸர்ட்டா பிரச்சினையைச் சமாதானமான முறையிலேயே தீர்த்துக்கொள்ள டூனிஸியா விரும்புகிறதென்றும் இது சாத்தியமாகாவிடின் டூனிஸிய மக்கள் இறுதிவரை போராடத் தயாராக இருக்கிறார்களென்றும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## கைப்பணி பொருட்காட்சி

கொழும்பு, புதன்
உள்நாட்டு, கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா, நாளை கலாபவனத்தில் ஸ்ரீலங்கா ஜாதிக கலாபவன கைப்பணி பொருட்காட்சி ஒன்றைத் திறந்துவைப்பார்.

## புதுச்சேரி சிவாச்சாரியார்

யாழ்ப்பாணம், திங்கள்
வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் இன்று மாலைபுதுச்சேரி ஸ்ரீ வேதபுரீச்வரர் தேவஸ்தானபூசகர்தி. பு. அ. சுப்பிரமணியசிவாச்சாரியார் "ஆலயவழிபாடு" எனும் பொருள் பற்றி பேசுகிறார்கள்.

## திரு. எஸ். கந்தசாமி

திரு. எஸ். கந்தசாமி யாழ்ப்பாண சிறைச்சாலை விசிட்டர் கமிட்டியின் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# நகர, கிராமங்களில் உள்ள வீடமைப்பு நிலத்தை

## கணக்கிடுமாறு மந்திரி கோரிக்கை

கொழும்பு, புதன்
வீடமைப்புக்காக நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள நிலத்தைக் கணக்கிடும்படி ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீரா வீடமைப்புத் திட்டப் பிரத்தியேகக் கமிட்டியின் முதலாவது கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

அதிகரித்துவரும் ஜனத்தொகைக்கு ஏற்ப அதிக வீடுகள் கட்டவேண்டும் என்ற கருத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீண்ட கால வாடகைக்கு பலர் வீடு அமைத்துக் கொடுக்க முன்வந்திருக்கிறார்களென்றும் அவர்களின் உதவிகளைக் கவனிக்கும்படியும் கமிட்டியைக் கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டிற் கிடைக்கும் கட்டட வேலைப் பொருள்களையே அதிகமாக உபயோகித்து உள்நாட்டவர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் வெளிநாட்டுக்குச் செல்லும் பணத்தையும் குறைக்குமாறு அவர் மேலும் வற்புறுத்தினார்.

வெளிநாட்டவர் உதவியையும் தனியார் உதவியையும், ஏற்றுக்கொள்ளும் விஷயத்தை ஆராயும்படியும், திட்டத்தின் முன்னேற்றங்களை அறிவதற்காக அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பிக்கும்படியும் மந்திரி கேட்டுக் கொண்டார்.

தான் சமர்ப்பித்த பிரேரணையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதென்றும் அவர் கூறினார். அதன்படி பின்வருவனவற்றிற்கு வரி கிடையாது:

1. வாடகைக் கட்டுப்பாட்டு எல்லைக்குள் வரும், குடியிருப்புப் பகுதி.
2. சொந்தக்காரரே வசிக்கும் குடியிருப்புப் பகுதிகள்.
3. 2,000 சதுரஅடி பீடபூமியில் சொந்தக்காரர் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் சட்ட தேசிய வீடமைப்புத் திட்டத்திற்கு வேண்டிய மாற்றங்களை செய்து மீண்டும் பார்லிமெண்டின் அங்கீகாரத்திற்கு விடப்படும் என்று மந்திரி குறிப்பிட்டார்.